தமிழ் வாழ்க

தமிழ்ப்பொழில்

திங்களிதழ்

துணர்: ௫௬

மலர்: ௭

கரந்தைத் தமிழ்ச் சங்கம்

தொண்டு தமிழ் முன்னேற்றம்

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடு

திருவள்ளுவர் யாண்டு: ௨௲௧௩, -துந்துபி ஐப்பசி
(1982 அக்டோபர்-நவம்பர்)

MALLIKA ARTS
T.J.

பொழிற்றொண்டர்:
வே. சுப்பிரமணியன்

THE ... SERFOJI'S SARASWATHI MAHAL LIBRARY
THANJAVUR
23

தமிழ்ப் பொழில்

துணர்: ௫௬] [மலர்: ௭

உள்ளுறை:

1) தமிழ் நிகண்டுகள்—ஒரு மேல் நோக்கு .. 289
மா. சற்குணம், எம். ஏ.,
துணைப் பேராசிரியர்,
சி. பா. சு. தமிழ்க் கல்லூரி, மயிலம்.

2) ஐந்திணை ஐம்பது — 295
வே. சந்திரா, எம். ஏ., எம். ஃபில்.,
தமிழ் இலக்கியத் துறை,
சென்னைப் பல்கலைக் கழகம்.

3) நாட்டுப் பாடல்கள் — 300
கு. பிரேமாவதி, எம். ஏ.,
அரச்சலூர்.

4) பாரதி தரிசனம் .. 305
மா. ரா. அரசு, எம். ஏ.,
கரந்தைப் புலவர் கல்லூரி.

5) வள்ளுவர் காட்டும் மனநலமும் 313
முனைவர் இ. சுந்தரமூர்த்தி
தமிழ் மொழித்துறை,
சென்னைப் பல்கலைக் கழகம்.

6) பாரதி குழந்தை — கண்ணம்மா .. 318
கே. சோமசுந்தரம், பி. ஏ., பி. எல்.,
தஞ்சை.

7) சில நினைவுப் பாடல்கள் .. 323
அடிகளாசிரியர்,
தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சை.

8) உரிச்சொல்லும் பல பொருள் 324
முனைவர் ஆதித்தன்
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்.

9) வினாவிடை ... 329
பேராசிரியர் ச. பாலசுந்தரம்
367, மேலவீதி, தஞ்சாவூர்,

10) தமிழ்ச் சொற்களில் தத்துவம் ... 332
ந. இரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ. எல்;

தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் ருசு	திருவள்ளுவர் யாண்டு உ௲கஉ துந்துபி—ஐப்பசி 1982 அக்டோபர்—நவம்பர்	மலர் எ

தமிழ் வாழ்க

தமிழ் நிகண்டுகள்—ஒரு மேல் நோக்கு

—அறிவன்—

மா. சற்குணம், எம். ஏ.,

''பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல, கால வகையி னானே''

என்பதற்கேற்பக் காலந்தோறும் ஒவ்வொரு மொழியின் ஒலிநிலையிலும், சொல் நிலையிலும், பொருள் நிலையிலும் மாற்றங்கள் ஏற்படுவது இயற்கையே.[1] தமிழ் மொழியின் நெடிய வரலாற்றில் இத்தகு மாற்றங்கள் உலக வழக்கு, செய்யுள் வழக்கு ஆகிய இரண்டிலுமே தொடர்ந்து ஏற்பட்டுள்ளன என்பதை மொழிவல்லார் நன்குணர்வர். எனவே, ஒரு காலத்தில் வாழ்வோர் தமக்கு முந்திய காலத்தில் வழங்கிய சொற்களையும் அவற்றின் பொருள்களையும் அறிந்து கொள்வது சிரமமாகிறது அதனைப் போக்க அவ்வக் காலத்தில் வாழ்ந்த மொழியியலறிஞர்கள் தாம் அறிந்த;— வழக்கில் அருகிப்போன — சொற்களுக்குரிய பொருளை எடுத்துரைக்கலாயினர். இவ்வாறு அறிவிற் சிறந்தோர் சொற்களுக்குப் பொருள் கூறும்வகையில் எழுதிய நூல்கள் நிகண்டுகள் என வழங்கப்பட்டன. இந்நிகண்டுகள் குறித்து மேனோக்காக -In a birds view- ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பேச்சு வழக்கில் மட்டும் ஒரு மொழியைப் பயன்படுத்துவோருக்குப் பெரும்பாலும் மொழிச்சிக்கல் எழ வாய்ப்பு இல்லை. ஒரு வட்டாரத்தினர் வேறொரு வட்டாரத்தினருடன் தொடர்பு கொள்ளும் போது மொழிநிலையில் சில தடங்கல்கள் எழலாம். ஆனால் பழக்கத்தில் அவைகளை எளிதில் நீக்கிக் கொள்ளலாம். மொழியை

இலக்கிய வழக்கில் பயன்படுத்துவோருக்கே பல சிக்கல்கள் எழ வாய்ப்புள்ளன. காரணம் பழைய இலக்கியங்கள் அக்கால வழக்கு களை யொட்டியே மிகுதிப் படைக்கப்பட்டுள்ளன. அவை பின் வருவோருக்கு விளங்காமற் போகலாம். எனவே, இலக்கியங் களைக் கற்போர் பழங்காலச் சொற்களையும் அவற்றுக்குரிய பொருள்களையும் அறிய வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அதற்கு ஏற்ற வகையில் நிகண்டுகள் தோன்றி துணை புரிந்தன. எனவேதான் சில ஆண்டுகட்கு முன்னர் வரை மொழிக் கற்போர் நிகண்டு கற்றல் அவசியம் என்றிருந்தது. நிகண்டுப் பயிற்சிக்குப் பின்னரே இலக்கியம் பயின்று இறுதியில் இலக்கணம் கற்றல் முறை எனக் கொண்டனர் முன்னோர். இதனை ஆறுமுக நாவலர் தம் நன்னூல் உரையில் குறிப்பிட்டுள்ளமை கொண்டும் அறியலாம்.[2]

இயற்கையில் தோன்றிய பொருள்கள் பலவற்றையும் அவற் றின் அறிவு, வடிவு, பண்பு ஆகியவற்றிறகேற்ப பலவாறு வகைப் படுத்திக் காணலாம். அவ்வவ்விடத்தையும் காலத்தையும் சார்ந்து தோன்றிய பொருள்களைத் தமிழ் இலக்கணிகள் கருப்பொருள்கள் எனக் குறிப்பிட்டுள்ளமை அவர்தம் கூர்த்த அறிவைப் புலப்படுத்து கிறது. மனிதனையும் அவன் நுகர்விற்குரிய பொருள்கள் பல வற்றையும் கருப்பொருள்களெனக் கூறியுள்ளனர் என்றும் சிலர் கருதுவர். தெய்வம், மக்கள், விலங்கு, பறவை, இடம் முதலிய இயற்கைப் பொருள்களின் பெயர்களையும் அவற்றின் வினை பண்பு ஆகியவற்றின் பெயர்களையும், மற்றும் செயற்கைப் பொருள்கள் பலவற்றின் பெயர்களையும் அவற்றது பொருள்க ளுடன் நிகண்டு ஆசிரியர்கள் கூறியுள்ளனர். இவைகளைத் தொல்காப்பியர் முதலான இலக்கண ஆசிரியர்கள் உரியியல், மர பியல் முதலான இயல்களில் குறித்துச் சென்றனர். இத்தகைய மொழியாய்வு நூல்களாகிய பழைய இலக்கணங்களே இடைக் காலத்தில் தோன்றிய சொல், பொருளாய்வு நூல்களாகிய நிகண்டு களுக்குப் பாதை வகுத்துத் தந்தன. மொழியாய்வு என்பது சொல் லாய்வு, பொருளாய்வு ஆகியவற்றை உள்ளடக்கியதும் அதனாற் றான் போலும்!

'நிகண்டு' என்ற சொல்லுக்கு இதுவரை அறிஞர்கள் பல பொருள்களைக் கூறியுள்ளனர். கூட்டம் அல்லது தொகுதி எனப் பொருள் தருகிறார் சங்கரநமச்சிவாயர்.[3] நீண்ட (நிகண்ட) சொற் பட்டியல் என்பதால் நிகண்டு எனப்பட்டது என்பாரும் உளர்.[4] நிச்சயம் (உறுதி) எனவும் அகராதிப் பொருள் ஒன்று உளது.[5] நிகண்டு என்பது இடுகுறிப் பெயர் எனவும் கருதியுள்ள

னர். வடமொழித் தாக்கம் ஏற்பட்ட காலத்தில் 'நிகண்டு' என்ற சொல் தமிழில் சொற்பொருள் கூறும் நூல் என்ற பொருளில் வழங்கத் தலைப்பட்டிருக்கலாம். தமிழைவிட வடமொழியிலே மிகப் பழமையான காலந்தொட்டு 'நிகண்டு' என்ற சொல்லாட்சி அமைந்திருந்ததாகத் தெரிகிறது. வடமொழியுள் (சமற்கிருதம்) வேதத்துக்குரிய ஆறு அங்கங்களுள் ஒன்று நிருக்தம் என்பதாகும். நிருக்தத்தின் ஒரு பகுதியே நிகண்டு. சொற்களுக்குப் பொருளை ஆராய்வதே இந்நூல் எனவே இதுபோன்ற நூல் தமிழில் தோன்றியபொழுது அதுவும் நிகண்டு என்ற பெயரில் குறிக்கப்பட்டிருக்கலாம் என்பதே எமது கருத்து. இத்தகு நிகண்டு நூல்களை இலக்கணத் துறையிலே ஒன்றாகவே கொள்ளலாம். ஆயினும் இஃது ஐந்திலக்கண பாகுபாட்டுக்குள் அடங்காத ஒரு பிரிவுதான் என்பதும் எண்ணிப் பார்க்கத்தக்கது.

'உரிச்சொல்', 'உரிச்சொற்பனுவல்' போன்ற பண்டைய சொல்லாட்சிகட்குப் பின் முதன்முதலில் நிகண்டெனும் சொற்கூறு சங்ககாலப் புலவர் ஒருவரின் பெயரொடு சேர்ந்து காணப்படுகிறது. நிகண்டன் கலைக்கோட்டுத் தண்டனார் என்பது அப்புலவரின் பெயர்.[6] மான் கொம்பை நிமிர்த்திக் கைக்கோலாகக் கொண்டமையால் இவர் கலைக்கோட்டுத் தண்டன் எனப்பட்டார் என்ப. நிகண்டன் என்ற அடைமொழி எவ்வாறு அமைந்தது எனத் தெரியவில்லை. இதனை இடுகுறிப் பெயர் எனக் கொண்டனர் களவியல் உரைகாரரும்,[7] பின்வந்த நன்னூல் விருத்தியுரைகாரரும்.[8] அவர் நிகண்டொன்று செய்திருக்கலாம் என்பது சிலர் கருத்து.[9] ஆனால் இதற்கேதும் சான்றில்லை.

அடுத்து கி.பி. எட்டு அல்லது ஒன்பதாம் நூற்றாண்டில் தோன்றியதாகக் கருதப்படும் இறையனார் களவியல் உரையில் தான் 'நிகண்டு' எனும் முழுச்சொல் முதன்முதலாகக் காணப்படுகிறது. நூல்கள் இடுகுறியால் பெயர் பெறும் என்பதற்குச் சான்று காட்டுகையில் இச்சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். இதே காலக் கட்டத்தில் தோன்றியதாகக் கருதப்படும் சேந்தன் திவாரகத்திலும் அதையடுத்துத் தோன்றிய பிங்கலந்தையிலும் நிகண்டு எனும் சொல் குறிக்கப்பட்டுள்ளது.[10] ஆறங்க வகையுள் ஒன்றாக இதனைக் குறித்துள்ளனர். திவாகரர் ஆறங்கங்களின் உறுப்புகளாக நிகண்டு, நிருக்தம் ஆகிய இரண்டையுமே கூறியிருப்பதை இலக்கிய வரலாற்று ஆசிரியர் திரு. மு. அருணாசலம் அவர்கள் ஆராய்ந்து பார்த்து கிடைத்துள்ள ஏட்டில் அல்லது திவாகரர் கருத்தில் பிழை இருக்க வேண்டுமெனக் கருதுகிறார்.[11]

கி. பி. பதினாறாம் நூற்றாண்டில் நிகண்டொன்று செய்த மண்டல புருடர் என்பவரே முதன்முதலாகத் தம் நூற்பெயரில் நிகண்டு எனும் சொல்லைக் கையாண்டுள்ளார். 'நிகண்டு சூடாமணி' என்பதே அவர் தம் நூலுக்கு வைத்த பெயராகும். அவருக்குப் பின் வந்த நிகண்டு ஆசிரியர்கள் பலர் தாம் இயற்றிய சொற்பொருள் விளக்கும் நூல்களுக்கு நிகண்டு என்ற பெயரைச் சேர்த்து வழங்குவாராயினர்.[12] ஆனால் இவ்வகையில் எழுந்த நூல்களுள் பல நிகண்டெனும் பெயர் பெறாமலும் அமைந்துள்ளன.[13] மற்றும் இத்துறை சார்ந்த நூல்கள் சில தீபிகை, தீபம் முதலிய சொற்களை நூற் பெயராகக் கொண்டும் எழுந்துள்ளன [14]

இன்று தமிழில் கிடைத்துள்ள நிகண்டு நூல்கள் எல்லாம் ஒரே துறையைச் சார்ந்தன அல்ல. மொழி, மருத்துவம், சோதிடம் முதலான பல துறைகளில் நிகண்டுகள் தோன்றியுள்ளன. இப்பெருந் தமிழ்ப் பரப்பில் அறுபதுக்கு மேற்பட்ட நிகண்டுகளின் பெயர்க் குறிப்புக்கள் காணக் கிடைக்கின்றன.[15] ஆனால் இவைகளுள் பல கால வெள்ளத்திற்பட்டு கண்மறைவாகி விட்டன. இன்றைக்கு மொழித்துறையைச் சார்ந்தனவாக மட்டும் இருபதுக்கு மேற்பட்ட நிகண்டுகள் காணப்படுகின்றன. இந்நிகண்டுகளின் வகைப்பாடு, உள்ளடக்கம், வெளியீட்டுமுறை ஆகியன பற்றி இவண் சுருங்கக் காண்போம்.

முதல் நிகண்டாகிய திவாகரம், பழைய இலக்கண நூல்களைப் போன்று நூற்பா (சூத்திரம்) முறையில் அமைந்து தொளாயிரத்து ஐந்நூறு சொற்களுக்குப் பொருள் கூறியுள்ளது. இது பன்னிரண்டு தொகுதிகளில் இச்சொற்களை வகைப்படுத்தித் தந்துள்ளது. தொல்காப்பியத்தின் அடியொற்றி இதன் நூற்பாக்கள் அமைந்துள்ளன என்பர் டாக்டர் தா. ஏ. ஞானமூர்த்தி.[16] இயற்கைப் பொருள்களை இறைவனாக வணங்கிய தமிழர் வாழ்வியலை திவாகரத்தின் தெய்வப் பெயர்த் தொகுதி புலப்படுத்துகிறது. கோள் மீன்களின் பெயர்களும், நாள்மீன்களின் பெயர்களும் கூட தெய்வப் பெயர்களோடு சேர்த்துச் சுட்டப்பட்டுள்ளன. காலம், பருவம், கார்முகில் போன்றனவும் இப்பட்டியலில் சேர்ந்துள்ளன. மக்கட் பெயர் தொகுதியில் உடல் உறுப்புகளும் குறிக்கப் பெற்றுள்ளன. விலங்கினப் பெயர் தொகுதியில் விலங்கு, புள், ஊர்வன, நீர் வாழ்வன முதலியவவகளும் அவற்றின் உறுப்புப் பெயர்களும் இடம் பெற்றுள்ளன. மரப்பெயர்த் தொகுதியில் எல்லாவகைத் தாவரங்களும் அவற்றின் சினைப் பெயர்களும் காணப்படுகின்றன. இடப் பெயர்த் தொகுதியில் நீர்ப்பகுதிகள், நிலப்பகுதிகள் மற்றும் உலகம், நாடு, மலை முதலியனவும் பேசப்படுகின்றன. பல் பொருட் பெயர்த் தொகுதியில் பொன்மணிகள் மணப்பொருள்கள்

மற்றும் உணவுப் பொருட்கள் ஆகியனவும் கூறப்படுகின்றன. சோறு என்பதற்கு இருபத்துநான்கு சொற்களும், கள் என்பதற்கு நாற்பத்தெட்டுச் சொற்களும் வழங்கியுள்ளன! மேலும் இன்றைய சிற்றுண்டி வகைகளான பூரி, தோசை முதலானவற்றின் பெயர்களும் இதில் காணப்படுவது வியப்பைத் தருகிறது. செயற்கை வடிவப் பெயர்த் தொகுதியில் படைக்கருவிகள், அணிவகைகள், ஆடை வகைகள், பாத்திரங்கள், ஊர்தி வகைகள் முதலியன பற்றி விரிவாகக் கூறப்பட்டுள்ளமையும் வியப்பளிக்கிறது. அடுத்துவரும் இரு தொகுதிகளில் பலவகைப் பண்புப் பெயர்கள் வினைப்பெயர்கள் ஆகியன விரித்தோதப்பட்டுள்ளன.

ஒலி பற்றிய பெயர்த் தொகுதியில் சொல்லுதல், சொற்கள், பாடல், இசை, யாழ் ஆகியவற்றின் வகைப் பெயர்கள் விளக்கம் பெறுகின்றன. மேற்கண்ட பத்து தொகுதிகளும் ஓர் இயல்பினவாய் ஒரு பொருளுக்குரிய பல பெயர்களைக் (SYNONYMS) குறிப்பனவாய் அமைந்தன.

அடுத்து அமைந்த ஒரு சொல் பல்பொருட் பெயர்த் தொகுதியில் அகர வரிசையில் சொற்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒரு சொல்லுக்குரிய பல பொருள்கள் (HOMONYMS) ஆதியிற் பொருள், அந்தத்துப் பொருள் என இருவகையில் உரைக்கப்பட்டுள்ளன.

இறுதியதான பல்பொருட் கூட்டத்து ஒரு பெயர்த் தொகுதியில் ஒன்று முதல் முப்பத்துமூன்று வரையில் உள்ள தொகைப் பொருள்களை ஆசிரியர் தொகுத்துக் கூறியுள்ளார்.

(1) ஒரு பொருள் ⟶ பல்பெயர் (1 முதல் 10 தொகுதிகள்)
(2) ஒரு சொல் ⟶ பல்பொருள் (11-ஆம் தொகுதி)
(3) பல்பொருட் கூட்டம் ⟶ ஒரு பெயர் (12-ஆம் தொகுதி)

இவ்வாறு இன்றியமையாத மூன்று பாகுபாடுகளின் அடிப்படையில் பன்னிரண்டு தொகுதிகளையும் அமைத்துள்ளார் திவாகரர். இவ்வமைப்பு முறையே பின்வந்த நிகண்டு நூலார்க்குப் பெரிதும் துணைபுரிந்தது எனலாம். இவற்றுள் சில மாற்றங்களைச் செய்தும் செய்யாமலும் பிற்காலத்தார் பல நிகண்டுகளை யாத்துள்ளனர்.

திவாகரம், பிங்கலந்தை ஆகியவற்றை யடுத்து கயாதரம், உரிச்சொல் நிகண்டு முதலியன தோன்றின. பின்னர் சூடாமணி நிகண்டு, அகராதி நிகண்டு, ஆசிரிய நிகண்டு ஆகிய நிகண்டுகளும் எழுந்தன. இவைகளின் காலமுறை பற்றிய பட்டியலும், இவைகள் எழுதப்பெற்ற பலவகை யாப்பு பற்றிய செய்திகளும் பிறவும் அடுத்துவரும் கட்டுரைகளில் ஆராயப் பெறும். —[●]—

அடிக்குறிப்பு:

1) In fact there is no fixity in the meanings of words any more than there is in anything else. All is subject to the Universal flux
—P. B. Ballard Thought and language. P. 173.
2) ஆறுமுக நாவலர் உரை, நன்னூல் சிறப்புப்பாயிரம்.
3) நன்னூல் நூற்பா-460-இன் உரை
4) சுந்தரசண்முகனார், தமிழ் அகராதிக்கலை, பக். 13
5) தமிழ் லெக்சிகன், செ. ப. கழகம், தொகுதி 4, பக். 2239
6) நற்றிணை 382-ஆம் பாடலின் ஆசிரியர்
7) இறையனார் அகப்பொருள் உரை, பக். 4
8) சங்கர நமச்சிவாயர் உரை, நன்னூல் நூற்பா-49
9) அ. சிவப்பிரகாச முதலியார், அபிதான சிந்தாமணி, பக். 974
10) திவாகர நிகண்டு பக். 292; பிங்கல நிகண்டு பக். 402
11) மு. அருணாசலம், திவாகரர்-பக். 16
12) அகராதி நிகண்டு, ஆசிரிய நிகண்டு, கைலாச நிகண்டு, பொருள்தொகை நிகண்டு, நாமதீப நிக்ண்டு முதலியன
13) பல்பொருள் சூடாமணி, உசித சூடாமணி, கந்த சுவாமியம் முதலியன
14) பாரதி தீபம், நாநார்த்த தீபிகை முதலியன
15) டாக்டர் ச. வே. சுப்பிரமணியன், 'நிகண்டுகள்' கட்டுரை யின் பின் இணைப்பு-1
16) டாக்டர் தா. ஏ. ஞானமூர்த்தி, 'நிகண்டுகள்' கட்டுரை, கலைக்கதிர், செப்டம்பர் 1961 இதழ் பக். 61.

புகழ்ந்திட....

கள்ளையும் தீயையும் சேர்த்து—நல்ல
காற்றையும் வானவெளியையும் சேர்த்துத்
தெள்ளுதமிழ்ப் புலவோர்கள்—பல
தீஞ்சுவைக் காவியம் செய்து கொடுத்தார்
சாத்திரங்கள் பல தந்தார்—இந்தத்
தாரணியெங்கும் புகழ்ந்திட வாழ்ந்தேன்

—பாரதியார்

ஐந்திணை ஐம்பது—ஆராய்ச்சியின் வளர்ச்சி

வே. சந்திரா, எம். ஏ., எம். ஃபில்.,

முன்னுரை:

பண்டைத் தமிழ் இலக்கியத்துள் மூன்றாவதாக வைத்துப் போற்றப்படுவன பதினெண் கீழ்க்கணக்கு நூல்களாகும். 'பதினெண் கீழ்க்கணக்கு' எனும் தொடர், இன்றைய ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள பாடல் தொகுதியில் வழங்கப்படவில்லை. எனினும்,

''நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
பால்கடுகங் கோவை பழமொழி மாமூலம்
இன்னிலைசொல் காஞ்சியுட னேலாதி யென்பவே
கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு''

என்னும் பழம்பாடல் ஒன்றினால் கீழ்க்கணக்கு நூல்கள் யாவை என்பது புலனாகின்றன.

மேலும், ''பதினெண் கீழ்க்கணக்கு'' என்பதற்கான இலக்கணமும் பன்னிரு பாட்டியலில் காணப்படுகிறது.

''அகவலுங் கலிப்பாவும் பரிபாடலும்
பதிற்றைந் தாதி பதிற்றைம் பதீறா
மிருத்துடன் தொகுப்பது மேற்கணக் கெனவும்
வெள்ளைத் தொகையு மவ்வகை யென்பெறி
னெள்ளறு கீழ்க்கணக் கெனவுங் கொளலே''

—(பன். பா: 346)

எனவும்,

''அடிநிமிர் பில்லாச் செய்யுள் தொகுதி
அறம்பொருள் இன்ப மடுக்கி, அவ்வத்
திறம்பட உரைப்பது கீழ்க்கணக் காகும்''

—(பன். பா: 348)

எனவும் குறிப்பிடப்படுவதனால் அறியலாம் என்று, ஏ. வி. சுப்பிரமணிய அய்யர் குறிப்பிடுகிறார்.

உரையாசிரியர்கள்: இறையனார் களவியல் உரையில் 'பதினெண் கீழ்க்கணக்கு' நூல்களைப் பற்றிய குறிப்பேதுமில்லை என்று எம். ஆர். அடைக்கலசாமி குறிப்பிடுகிறார். இத்தொகையில் பதினெட்டு நூல்கள் இடம்பெற்றுள்ளன என்பதைத் தொல்காப்பிய உரையாசிரியரான, பேராசிரியரே ''பதினெண் கீழ்க்கணக்கினுள்ளும்'' என்னும் தொடரின் மூலம் தெரிவித்துள்ளார்.

மற்றும், மயிலைநாதர், நச்சினார்க்கினியர் போன்றோரின் உரைப்பகுதிகள் இக்கருத்தினை அரண் செய்கின்றன.

வீரசோழிய உரையாசிரியரான பெருந்தேவனார் ''இவ்விலக்கணம் கீழ்க்கணக்கு முதலாய செய்யுட்களுக்கே என்றறிக'' என்னும் தொடரில் இதனைக் குறித்துள்ளார். இவற்றால் பதினோராம் நூற்றாண்டு முதற்கொண்டே 'கீழ்க்கணக்கு' எனும் வழக்கு, தமிழ் இலக்கிய உலகில் இடம் பெற்றிருப்பதை அறிகிறோம்என்று க. த. திருநாவுக்கரசு கூறுகிறார்.

இவ்வளவு சிறப்புப் பொருந்திய பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான 'ஐந்திணை ஐம்பதின்' நூற்பெயர் ஆய்வு, நூலாசிரியர் ஆய்வு, நூற்பொருள் ஆய்வு, கால ஆய்வு, இதழ்வழி ஆய்வு, ஒப்பாய்வு, பட்ட ஆய்வு ஆகியவற்றை ஒருவாறு தொகுத்து இக் கட்டுரையில் தர முயல்கிறேன்.

நூற்பெயர் ஆய்வு: முதன்முதலாக இதனை ஆராயத் தொடங்கியவர் சி. வை. தாமோதரம் பிள்ளையவர்களே. ஆயிரத்து எண்ணூற்று எண்பத்து ஏழில் கலித்தொகைப் பதிப்புரையில் (பக். 17) 'நாலடி நான்மணி' என்ற செய்யுளையும் குறிப்பிட்டு, நூற்பெயர் ஆராய்ச்சியைப் பற்றி எழுதியுள்ளார்.

பின்னர் ஆயிரத்து எண்ணூற்று எண்பத்தொன்பதில் இலக்கண விளக்கப் பதிப்புரையில் கோ. சீனிவாசராகவாசாரியார் அவர்கள் தாம் எழுதிய நாலடியார் நூல் வரலாற்றில், 'நாலடி நான்மணி நானாற்ப 'தைந்திணை' முப்பால் கடுகங் கோவை பழமொழி' என்பவற்றுள் ஐந்திணை என்பது ஐந்திணை ஐம்பதை மட்டும் குறிக்குமா? அல்லது அகப்பொருள் நூல்களாக கீழ்க்கணக்கில் அமைந்துள்ள ஐந்திணையும் குறிக்குமா? என்று தெளிந்து, ஐந்திணை ஐம்பதின் ஆசிரியர் மாறன் பொறையனார் என்றும், அதில் ஐம்பது செய்யுட்கள் உள்ளன என்றும் குறிப்பிடுகிறரர். இதன்கண் சிறிதளவு ஐந்திணை ஐம்பது ஆராய்ச்சியின் வளர்ச்சியினை அறிய முடிகிறது.

எசு. வையாபுரிபிள்ளையவர்கள் ஆயிரத்துத் தொண்ணூற்று அறுபத்து நான்காம் ஆண்டு வெளிவந்த 'இலக்கிய மணிமாலையில்' ''கலித்தொகைப் பதிப்புரை எழுதிய பின்னரே ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது என்ற நான்கு நூல்கள் எனக்கும் அகப்பட்டன'' என்று குறிப்பிட்டுள்ளார்.

இரா. இராகவையங்கார் ''ஐத்திணை ஐம்பது'' என்ற நூலில்

இன்பப் பகுதிக்குரிய இருத்தல், புணர்தல், ஊடல், பிரிதல், இரங்கல் என்னும் ஐவகை ஒழுக்கங்களையும் முறையே முல்லை, குறிஞ்சி, மருதம், பாலை, நெய்தல் என்னும் பெயரான் ஐந் திணையாக வைத்து ஒவ்வொரு திணைக்கும் பத்துப்பதது வெண் பாவாகக் கூறுதலான் ஐந்திணை ஐம்பது என்று பெயர் வந்த தாக பெயர்க் காரணம் பற்றிக் குறிப்பிடுகிறார்.

பாலூர் கண்ணப்ப முதலியார் 'தமிழ்நூல் வரலாறு' என்ற நூலில், பெயர்க்காரணம் பற்றிக் குறிப்பிடுகிறார். ஐந்து திணை களின் இயல்பைப் பற்றி பப்பத்து வெண்பாக்களால் இந்நூல் பாடப்பட்டிருத்தலின் இப்பெயர் பெற்றது என்று குறிப்பிடுகிறார். இவரது கருத்தும் இரா. இராகவையங்கார் கருத்தும் ஒத்துச் செல் வதைக் காணலாம்.

இரா. சீனிவாசன் அவர்கள் 'தமிழ் இலக்கிய வரலாறு' என்ற நூலில், ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது என்பன ஒருவரைப் பார்த்து மற்றொருவர் பெயர் வைத்துக் கொண்டதுபோல் இருக்கிறது. சங்கச் சாயல் மட்டும் முல்லை, குறிஞ்சி, மருதம், பாலை, நெய்தல் என்று இருக்கிறது என்று குறிப்பிடுகிறார்,

மேலும் கே. எசு. சீனிவாசப்பிள்ளை, சதாசிவபண்டாரத்தார் போன்றோரும் நூற்பெயர் ஆய்வு பற்றி இதுபோன்ற கருத்துக் களையே கூறுகின்றனர்.

மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள் 'பத்தொன்பதாம் நூற் றாண்டு தமிழிலக்கியம்' என்ற நூலில் ஐந்திணை பெயர்பற்றிக் குறிப்பிடும்போது 'நாலடி நான்மணி' என்ற இந்த வெண்பாவில் ஐந்திணை என்பதைச் சிலர் ''ஐந்தொகை'' என்று பாடம் ஓதி அதற்கு நெடுந்தொகை -அகநானூறு- என்று பொருள் கூறினார் கள் என்று குறிப்பிடுகிறார். இக்கருத்து மேற்கூறப்பட்ட கருத்துக் களினின்றும் மாறுபட்டதாகும்.

ஐந்திணை ஐம்பது பெயர் பற்றிய ஆய்வுகளை நோக்கும் போது, பெரும்பாலும் ஐந்து திணைகளாகப் பகுக்கப்பட்டுப் பப் பத்து பாட்டுக்களில் கூறப்பட்டிருக்கிற காரணத்தினாலேயே ஐந் திணை ஐம்பது என்று பெயர் பெற்றிருக்கலாம் என்பது எண்ணத் தோன்றுகிறது.

திரு. த. கனகசுந்தரம் பிள்ளை மிகப் பழயை கணக்குச் சுவடி யிலேயே ஐந்திணை ஐம்பது இருப்பதாகக் கூறுகிறார்.

நூலாசிரியர் பெயர் பற்றிய ஆய்வு: நூலாசிரியர் பற்றி ஆயிரத்துத் தொண்ணூற்று இருபத்திரண்டில் கே. எசு. சீனிவாசப் பிள்ளை குறிப்பிடுகிறார். ஆயிரத்துத் தொண்ணூற்று ஐம்பத்தைந்தில் டி. வி. சதாசிவபண்டாரத்தார் ''ஐந்திணை ஐம்பது பாடிய ஆசிரியர் மாறன் பொறையனார் என்னும் பெயரினர். மாறன் பொறையனார் என்ற தொடர் மாறனுடை மகனார் பொறையனார் என்று இருத்தல் கூடும். அன்றி பொறையன் என்னும் இயற்பெயருடன் மாறன் என்ற சிறப்புப் பெயர் பெற்றிருத்தல் கூடும். மாறன் என்பது பாண்டியனைக் குறிக்கும் சிறப்புப் பெயர். பொறையன் என்பது சேரனைக் குறிக்கும் சிறப்புப் பெயர். இப்பெயரமைதி கொண்டு இந்நூலாசிரியர் தென்பாண்டி நாட்டினராய் இருக்கலாமோ என்று கருதவும் இடமுண்டு. இவரை 'வண்புள்ளி மாறன் பொறையன்' என்று பாயிரம் குறிப்பிடுகின்றது. பள்ளிக் பணக்குப் புள்ளிக்கு உதவாது' என்பது பழமொழி. புள்ளி என்பது கணக்கென்றே பொருள்படும்.

தமிழில் ஐந்தொகை முதலிய பெருங்கணக்குகள் புள்ளி என்றே சொல்லப்படும். வண்புள்ளி என்ற அடைமொழிச் சிறப்பால் இந்நூலாசிரியர் பாண்டி நாட்டு அரசியலில் பண வரவு செலவுக்குரிய பெரிய பதவி யொன்றைப் பெற்று விளங்கியவராக இருத்தல் வேண்டும் என்று கொள்ளலாம். இவர் இருவகைத் திருவும் ஒருங்கு பெற்றவராதல் வேண்டும்'' என்று விளக்குகிறார்.

இக் கருத்தினையே 'பதினெண் கீழ்க்கணக்குச் சொற்பொழிவுகள்' எனும் நூலில் அ. க. நவநீதகிருஷ்ணன் நூலாசிரியர் ஆய்வு பற்றிக் கூறும்போது குறிப்பிடுகிறார்.

சமய ஆய்வு: ஐந்திணை ஐம்பதின் முதற்பாட்டால் நூலாசிரியரது சமயக் கொள்கை இன்னதெனப் புலப்படுகிறது. அப்பாடல்,

''மல்லர்க் கடந்தான் நிறம்போன்(று) இருண்டெழுந்து
செல்வக் கடம்பமர்ந்தான் வேல்மின்னி—நல்லாய்!
இயங்கெழில் எய்தவன் தார்பூப்ப ஈதோ
மயங்கி வலரேரும் கார்''

என்பதாகும். இப்பாட்டால் நூலாசிரியர் தமது சமயப் பொது நோக்கைப் புலப்படுத்துகிறார். வானத்தில் கருமேகங்கள் கண்ணபிரானது வண்ணத்தைப் போன்று இருண்டெழுந்தன. கடப்பமாலை அணிந்த முருகவேளின் வேற்படையைப் போல மின்னின. திரிபுரம் எரித்த விரிசடைப் பெருமானாகிய சிவனுக்குரிய கொன்றைப் பூக்கள் நன்றாக மலரும் வண்ணம் மழை பெய்யத் தொடங்கின என்பது இப்பாடலின் பொருளாகும்.

முதற்கண் முல்லைநிலத் தெய்வமான மாயோனையும் பின்னர் குறிஞ்சி நிலத்தெய்வமான முருகனையும் குறித்தபின்பு சிவபெருமானுக்குரிய மலரை சிறப்புற குறிப்பிடுவதனால் இவர் சைவ சமயத்தினர் என்று கருத இடமுண்டு எனலாம். மேலும் இப்பாடலால் அவர் புத்த சமயத்தினர் அல்லர் என்பது நன்கு புலனாகும் என்று அ. க. நவநீதகிருஷ்ணன் கூறுவதும் குறிப்பிடத் தக்கதாகும்,

ஆ. ஜெபரத்னம் எவ்வித ஆதாரமும் கூறாமல், நூலாசிரியர் சமயப் பொதுநோக்குடையவர் என்று மட்டும் சுட்டியுள்ளார்.

பொருளாய்வு, கால ஆய்வு, இதழ்வழி ஆய்வு, ஒப்பாய்வு, பட்ட ஆய்வு போன்றவற்றை அடுத்த இதழில் காணலாம்.

துணை நூல்கள்:

1. சீனிவாசப்பிள்ளை, கே. எசு.,
   தமிழ் வரலாறு, (பக். 35)
2. சதாசிவ பண்டாரத்தார்.,
   தமிழ் இலக்கிய வரலாறு, (பக். 60)
3. மயிலை. சீனி, வேங்கடசாமி.,
   பத்தொன்பதாம் நூற்றாண்டு தமிழ் இலக்கியம், (பக். 85)
4. அ. க. நவநீதகிருஷ்ணன்,
   பதினெண் கீழ்க்கணக்குச் சொற்பொழிவுகள்

ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவி

ஆண் தன்மை திரிந்து பெண்டன்மைப்பட்ட பொருளைக் குறிக்கும் பேடி என்னும் பெயர், ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவியாகும், இது தனக்கெனப் பாலுணர்த்தும் ஈற்றெழுத்து உடையதன்று; உயர்திணைக்குரிய பாலில் இசைக்கும்.

எ-டு: பேடி வந்தாள்; பேடியர் வந்தார். (வந்தாள், வந்தார் என உயர்திணைச் சொற்கொண்டு முடிந்தன.)

ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவியாகிய இது ஆண் பாலில் வருதலின்று; பெண்பாலிலும் பெண்மை பற்றிய பலர் பாலிலும் மட்டுமே வரும்.

—தொல். சொல் சேனாவரையம்.

நாட்டுப் பாடல்கள் — ஒரு சிறு கண்ணோட்டம்

கு. பிரேமாவதி, எம். ஏ.,

கல்லாத பாமர மக்களால் பாடப்படுபவை நாட்டுப் பாடல்கள்; இப்பாடல்கள் எளிய பாடல்கள்; எளிய பாடல்களோடு இனிய பாடல்களும் கூட: இனிய பாடல்களோடு சுவையான பாடல்களும் ஆகும். இப்பாடல்கள் கிராம மக்களின் வாழ்வோடு பின்னிப் பிணைந்தவை. வாழ்க்கையினூடே பாடினர் என்பதைவிட பாடல் களினூடே வாழ்க்கையை நடத்தினர் என்றே கூறலாம்; நாட்டுப் புறப் பாடல்கள் ஆகாயப் பூக்களல்ல; மண்ணின் மலர்கள்—மானு டக் கனிகள். இவை வாழ்க்கையில் பிறந்து, வாழ்க்கையில் வளர்ந்து, வாழ்க்கைக்கே பயன்படுகின்றன'', என்ற கருத்து நாட்டுப் பாடல்கள் மக்கள் வாழ்வில் இடம்பெற்று இருந்த தன்மை யைச் சுட்டுகிறது எனலாம்.

வாழ்வின் நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டே இப் பாடல்கள் எழுகின்றன. பிறப்பு, இறப்பு, ஆசைகள், குடும்ப நிகழ்ச்சிகள் என்பனபோல் சாதாரணச் செய்திகளே பாடல்களின் பாடுபொருளாக அமைகின்றன.

ஈரோடு வட்டத்தில் தொகுக்கப்பட்ட நாட்டுப் பாடல்களில் ஒரு சில பாடல்களைப் பற்றிய ஒரு சிறு கண்ணோட்டம் ஆக இக்கட் டுரை அமைகிறது.

தாலாட்டுப் பாடல்கள்:

இப்பாடல்களைத் தாயோ, பிற பெண்களோ பாடுவர். ஈரோடு, கோவைப் பகுதிகளின் பேச்சு வழக்கில் 'தொட்டப் பாட்டு (தொட்டில் பாட்டு)' என்று வழங்கப்படுகிறது. இப்பாடல்களில் ஒலியசைச் சொற்கள் அதிகம் இடம்பெறும். பாடல்களின் தொடக் கத்திலும், இடையிலும், முடிவிலும் இச்சொற்கள் காணப்பெற லாம். லொளாயி, தூரிதூரி, ராரிரோ, ராராரிரோ என்பது போன்ற சொற்கள் இடம்பெறும். பொதுவாக உலகத்திலுள்ள அனைத்துமொழி நாட்டுப்புறத் தாலாட்டுப் பாடல்களிலும் ஒலி யசைச் சொற்கள் இடம்பெறக் காணலாம்.

Aside from humming, the most common syallables of are loo loo, lalla lullay, ninna-nanna, do, do. These are heard in English, Polish, Rummanian Franch, Italian etc as they were in the Latin of ancient Rome and Greack of Athens''[2] என்ற கருத்து தாலாட்டுப் பாடல்களில் ஒலியசைச்

சொற்கள் இடம் பெற்றுள்ள தன்மையையும், பல்வேறு மொழிகளிலும் பல்வேறு ஒலியசைச் சொற்கள் பயன்படுத்தப்படுகின்ற தன்மையையும் சுட்டுகிறது.

தாயின் தாலாட்டில் பாச உணர்ச்சி, பொங்கி அணையுடைத்த ஆறென ஓடக் காணலாம். ஐயிரண்டு திங்கள் அங்கமெலாம் நொந்து பெற்ற தன் மழலை தொட்டியில் மலரென படுத்திருக்கக் காண்கிறாள் தாய்; பல்வேறு அணிகலன்களை அணிவித்துத் தன் குழந்தையின் அழகைப் பார்த்துப் பார்த்து உவக்கிறாள்; மகிழ்ந்தது ஒரு கணமே; மறுகணம் அவள் மனம் துயரால் வருந்துகிறது. மலரினும் மெல்லிய தன் மழலையின் மெல்லுடல் அணிகலன்களை அணிவித்தமையால் துன்புறுமே என்று அவள்மனம் துயருறுகிறது.

''தூங்காத கண்ணுக்குத் துரும்புகொண்டு மையெழுதி
உறங்காத கண்ணுக்கு ஓலைகொண்டு மையெழுதி
என் கண்ணோட கண்ணுறங்கு கானமயில் உறங்கு
வெள்ளிச் சிறுசலங்கெ என்னோட தோகைக்கு
விரல் அழுந்துமிண்ணு சொல்லி
தங்கச் சிறுசலங்கெ என்னுடைய கண்ணான
கண்ணுக்குக் கால் அழுந்துமிண்ணு சொல்லி''

என்ற தாலாட்டுப் பாடலைக் கேட்கும் பொழுது,

''அனிச்சமும் அன்னத்தின் தூவியும்
மாதர் அடிக்கு நெருஞ்சிப் பழம்''

என்ற குறளே எண்ணத்தில் எழுகிறது. தாயின் தாலாட்டில் கவிஞனின் கவிப்புலமை வெளிப்படக் காண்கிறோம்.

இவ்வாறு தாய்மையின் கனிவில் எழுந்த 'தாலாட்டுப் பாடல்களே பின்னாளில் பெரியாழ்வாரை கண்ணனுக்குத் தாலாட்டுப் பாடல்கள் பாடத் தூண்டின; ஏட்டிலக்கியத்தில் பிள்ளைத் தமிழின் ஒரு பருவமாக அமையச் செய்தது. எனவே, தாய்மை உலகிற்கு வழங்கிய இலக்கியப் பரிசு தாலாட்டு''[3] என்ற கருத்து ஏற்புடையதாக அமைகிறது எனலாம்.

குழந்தைப் பாடல:

தொட்டிலில் பாடல்களைக் கேட்டு வளர்ந்த குழந்தை வளர வளர, கதைகளிலும் பாடல்களிலும் ஆர்வம் காட்டுவதில் வியப்பில்லை. பொதுவாக குழந்தைகள் கதை-பாடல்களில் ஈடுபாடு காட்டுவர்; இவ்வார்வத்தை வளர்க்கும் நிலையில் குழந்தைகளிடையே பலவகைப் பாடல்கள் கிராமப்புறங்களில் வழங்கப்படுகின்றன. விளையாட்டிற்கு எனத் தனிப்பாடல்கள், பொழுது

போக்காகப் பாடுவதற்கு என்று சில பாடல்கள் எனப் பல நிலைகளில் குழந்தைகள் பாடல்களைப் பாடுவர்.

இவர்களால பாடப்படும் பாடல்கள் ஓசை நயம் உடையதாக விளங்கும்; பொருள் தொடர்பற்ற நிலையிலும் அமையலாம். குழந்தைகள் தம் மகிழ்விற்காக, விளையாட்டிற்கு சுவை சேர்க்க இதுபோல் பாடல்களைப் பாடுவதால் பொருள் தொடர்பினையோ பொருள் ஆழத்தையோ கவனிப்பதில்லை. இன்றியமையாத சில செய்திகளைச் சுட்டுவதாகக் கூட இப்பாடல்கள் அமையக் காணலாம்.

ஒரு நாட்டின் மீது அண்டை நாட்டின் ஆக்கிரமிப்புத் தன்மை, பகையுணர்ச்சி கண்டு கற்பனையாளர்களாய் இருப்பின் பக்கம் பக்கமாக ஏடுகளுக்கு கதை—கவிதை—கட்டுரைகளை எழுதுவர்; ஏடுகளின் ஆசிரியர்கள் பக்கம் பக்கமாகத் தலையங்கம் தீட்ட முனைவர். சிறு குழந்தைகளால் என்ன செய்ய இயலும்? தம் உணர்ச்சியினைப் பாடுவர்.

அவ்வாறு எழுந்த பாடல் ஒன்றினைக் காண்போம். சீனா நம் நாட்டின் மீது போர் தொடுத்த காலத்து, அந்நாட்டின் பகையுணர்ச்சி கண்டு கொதிப்புற்ற நாட்டுப்புற மக்கள் அந்நாட்டின் மீது தாங்கள் கொண்ட வெறுப்புணர்ச்சியினை பாடலாக்கினர்; குழந்தைகள் பாடி மகிழ்ந்தனர், அப்பாடல்

''ஐசக்கா ஐ
அரைப்படி நெய்
சீனாக்காரன் தலையிலே
தீயெப் பத்த வை'' என்பதாகும்

இப்பாடல் இன்றைய நிலையில் நமக்கு வேடிக்கையானதாகத் தோன்றலாம். நாட்டுப்புற மக்களின், குழந்தைகளின் நாட்டுப் பற்றினுக்கு இப்பாடல் சிறந்த சான்றாக நிற்கிறது: சீனர்கள் இந்தியாவின் மீது போர் தொடுத்த செய்தியைத் தரும் வரலாற்றுக் குறிப்பாக இப்பாடல் அமையும் சிறப்பினைப் பெறுகிறது.

"A tisket A Lasket
Put Hitler in a basket"[4]

என்ற பாடல் ஆங்கில மொழி குழந்தைப் பாடலாகும். இப்பாடல் இரண்டாம் உலகப் போரின்போது இட்லர்பால் ஆங்கிலேயர் கொண்ட வெறுப்புணர்ச்சியைச் சுட்டுகிறது. இவைபோன்ற வரலாற்றுக் குறிப்புடன் கூடிய நாட்டுப் பாடல்கள் சிறப்பிடம் பெறுகின்றன.

கும்மிப் பாடல்:

பெண்கள் கைகளைக் கொட்டியபடி ஆடும்போது பாடல்களைப் பாடியவாறு ஆடுவர். இப்பாடல்களில் பாடுபொருள் எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம். கும்மிப் பாடல் ஒன்றில் நிலம் உழப்பட்டு, நாற்று நடப்பட்டு, பயிர்கள் நன்கு வளர்ந்து, விளைந்து கதிர் மணிகள் அறுவடை செய்யப்பட்டு, நெல் மூட்டைகள் வீட்டிற்குக் கொண்டு செல்லும் தொடர் நிகழ்ச்சி ஒரு கவின் காட்சியாக அழகுறக் காட்டப்படுகிறது. நிலம் உழப்படுகிறது. அந்நிலம் மாடுகள் கட்டி உழப்படாமல் குதிரையும் யானையும் கட்டி உழப்படுவதாகப் கற்பனை வளத்துடன்,

''யானைகட்டி ஏலேலோ சேறுகுழப்பி
ஐலுசம்பா ஏலேலோ நாத்துவச்சு
குதிரைகட்டி ஏலேலோ சேறுகுழப்பி
குயிலுச்சம்பா ஏலேலோ நாத்துநட்டு''

என்று பாடுகின்றனர். மேற்கூறிய பாடலில் நிலம் உழப்பட்டமை —நாற்று நடப்பட்டமை கூறப்படுகின்றன.

''கூளேபுள்ளே ஏலேலோ வெச்சநாத்து
குலுங்குதடி ஏலேலோ சன்னச்சம்பா
உருக்கு வெச்சோம் ஏலேலோ கருக்கருவா
சுழட்டுதடி ஏலேலோ நெல்லம் பிள்ளே
சாயநல்ல ஏலேலோ புடி அருவா
சாயுதடி ஏலேலோ நெல்லம்பிள்ளை
குட்டெநல்ல ஏலேலோ புடி அருவா
குமியுதடி ஏலேலோ நெல்லம்பிள்ளே''

என்று பாடுகின்றனர். பயிர் செழித்து வளர்ந்தமை, கதிர் அறுவடை செய்தமை ஆகிய செய்திகள் மேலே கூறப்படுகின்றன.

''வண்டிவந்து ஏலேலோ நிக்குதடி
வடமதுரை ஏலேலோ பேட்டையிலெ
இருசு இறகுகளடி இடதுமாடு தத்தளிக்க
வண்டி இறக்குகளடி வலதுமாடு தத்தளிக்க

என்று நெல் மூட்டைகள் வண்டியில் ஏற்றப்பட்டு, மாடுகள் வண்டியை இழுத்துச் செல்ல இயலாது தவிக்கின்ற நிலை கூறப்படுகிறது.

இவ்வாறு ஒரு தொடர் நிகழ்ச்சி தன்மை நவிற்சியாக கும்மிப் பாடலில் கூறப்படுகிறது. இச் செய்தியினையே காப்பியப் புலவர்கள் நாட்டுப் படலத்தில் மிகைபட வர்ணிக்கின்றனர்.

தனிப்பாடல்:

வாழ்வில் பட்ட அவலங்கள் பெண்ணின் மனதை நெருடுகின்றன. மனதினின்று பொங்கும் துன்பத்தைப் பாடலாகக் கொட்டுகிறாள்; அவளின் அவல உணர்ச்சியுடன் சிறிது கற்பனையும் கலந்து பாடல் அழகாக முகிழ்க்கிறது. கேட்போரையும் கவர்கிறது.

''எல்லையிலெ ரெண்டு மரம்
ஏலக்கா(ய்) காய்க்கும் மரம்
ஈஸ்வரியே துக்கம் சொன்னா(ல்)
ஏலக்கா(ய்) பிஞ்சுதிரும்''

என்று பாடுகிறாள். அவளின் துக்கம் பெரிது; ஆனால் 'ஏலக்காய் பிஞ்சுதிரும்' என்ற கற்பனை அதில் கலக்க அவளின் அவலப் பாடல் நம் மனதைத் தொடுகிறது.

நாட்டுப் பாடல்கள் கணக்கற்று அவ்வவ் மொழிகளில் காணப் படுகின்றன. ஊர். வட்டம், மாவட்டம் என்று விரிந்து, பரந்து செல்லும் தன்மையுடையன. அவ்வகையில் நாட்டுப் பாடல்களைப் பற்றிய ஒருசிறு நோக்கே இக்கட்டுரையாம்.

★

அடிக்குறிப்புகள்:

1) சண்முகசுந்தரம், சு.
தமிழிலக்கிய கொள்கைகள்-3.,
பதிப்பாசிரியர்: சுப்பிரமணியம், டாக்டர் ச. வே ,
மணவாளன், அ. அ., உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
அடையாறு, சென்னை-6000 020, 1978, பக். 196.

2) The Standard Dictionary of Folklove Mythology and Legend, Maria Leach, Editor. Jerome Fried Associate Editor, Funk Wagnalls Publishing Company, Newyork, 1950, Page. 653.

3) சரோசினி அம்மாள் கா., ஆய்வு மலர் தொகுதி-1,
தொகுப்பாளர்: சுப்பிரமணியம், ச. வே.,
கேரள பல்கலைக் கழகத் தமிழ்த்துறை, பழைய மாணவர் மன்றம் வெளியீடு, 1972, பக்கம் 28.

4) The Standard Dictionary of Folklove Mythology and Legand, Maria Leach, Editor. Jerome Fried Associate Editor, Funk Wagnalls Publishing Company, Newyork, 1950, Page. 1017.

பாரதி தரிசனம்*

மா. ரா. அரசு

தமக்கென்று தனிப்பாதை வகுத்துக்கொண்டு நடந்துசெல்கிற போது, இடையிலே நேருகின்ற அனுபவங்கள் கசப்பானவை யாகத்தான் இருக்கின்றன. இனியதோர் இலட்சியத்தை இலக் காகக் கொண்டு முன்னேறுபவர்கள் அந்தக் கசப்புகளை யெல்லாம் விழுங்கித்தான் ஆக வேண்டும்; அது தவிர்க்க முடியாதது.

ஓயாத போராட்டங்களுக்கிடையே இலட்சியப் பயணம் நடத் திய பாரதியார், தாம் அறிந்தவற்றை—தாம் உணர்ந்தவற்றை—தாம் அனுபவித்தவற்றை யெல்லாம் நம்மோடு பகிர்ந்து கொள்ளு கின்றார், தம்முடைய சுயசரிதையின் வாயிலாக.

தம்மைப் பற்றிச் சொல்வதன் மூலம், நம்மைப் பற்றிச் சிந்திக்க வைக்கின்றார். எப்படி வாழ வேண்டும்? எப்படி வாழக்கூடாது? என்பதையெல்லாம் நமக்குப் புரிய வைக்கின்றார்.

அப்படி என்னதான் சொல்லுகிறார் பாரதி? ஆசையை ஒழிக்கச் சொல்லுகிறார். இது ஒன்றும் புதிதல்லவே! பல நூறு ஆண்டுக ளாக, பலரும் சொல்லிச் சொல்லிப் பழகிய பழங்கதையாயிற்றே!

செய்தி ஒன்றுதான். ஆனால், சொல்லுகின்ற முறையில் தான் பாரதி வேறுபட்டு நிற்கிறார். அறிவுரையாகச் சொல்லாமல் அனுபவமாகச் சொல்லுகிறார். இதைச் செய்யாதே என்று சொல் லாமல், இதைச் செய்தால் இன்னது வரும் என்று தம் அனுப வத்தைச் சொல்லி எச்சரிக்கின்றார் அறிவொடு அனுபவம் சேர்ந்து அவர் கூறும் செய்திகள் நம்மைப் பிணைக்கின்றன; தடுத்து நிறுத்து கின்றன; சிந்திக்க வைக்கின்றன.

தீமைகள் மலிந்த உலக வாழ்க்கையில் எந்த ஒன்றிலும் ஆசை கொள்ள வேண்டாம் என்பது பாரதியின் அறிவுரை.

மனித வாழ்க்கைக்கு எவை அடிப்படை? ஆசையும் நம்பிக்கை யுமே அடிப்படை.. சராசரி மனிதனை ஆசைதான் வழிநடத்துகிறது. அவன் தவறுகளுக்கு எல்லாம் அதுவே காரணமாகிறது.

'இவ்வளவு போதும்' என்று எண்ணுகிற நெஞ்சு அது கிடைத் ததும், அடுத்த கட்டத்திற்குத் தாவுகிறதே, அது ஏன்?

அதுதான் ஆசையின் இயல்பு. ஆசை என்கிற தாகம் ஏற்படும்போது இன்னும், இன்னும் என்னும் வேட்கைதான் அதிகமாகுமே அல்லாமல் அந்தத் தாகம் தீருவதில்லை என்பது பாரதியின் வாக்கு.

ஆசை கொண்ட மனம் ஒருபோதும் அடங்குவதில்லை. விரும்பியது கிடைத்தாலும் போதாது—போதாது என்று, வாழ்க்கை முடியும் வரையும் அது தீராத வேட்கையுடன் அலைந்து கொண்டிருக்கும்.

ஆசைப் படுகுழியில் விழுந்தவர்களை, ஆசையின் அலைக்கழிப்புக்கு ஏற்ப, தம் பாதையை மாற்றி அமைத்துக்கொண்டவர்களைக்- 'கயவர்கள்' என்றும் 'காய்ந்த மனம்' கொண்டவர்கள் என்றும் சாடுகிறார் பாரதி. நிறைவேறாத ஆசைகளும். நிறைவடையாத நெஞ்சமுமே அவரின் உடைமைகள்; அவர்தம் ஆசையே அவர்களுக்குக் காலன். இதைப் புரிந்து கொள்ளாமல் விட்டில்களாக மாய்கிறார்களே என்று வருந்துகிறார்.

நாம் படித்து மறந்த சில கதைகளை இங்கு நினைவுகூர்வது பொருந்தும் என்று எண்ணுகிறேன்.

பொன்முட்டை இடும் வாத்தின் கதையும்', 'தொட்டதெல்லாம் பொன்னாக வேண்டும் என்று' வேண்டி வரம் பெற்றுத் தவித்த வேந்தனின் கதையும் நமக்குப் புதிதல்லவே.

பொன் முட்டைகளுக்கு ஆசைப்பட்டு, வாத்தைக் கொன்று. அதனால், உள்ளதையும் இழந்து நின்ற அந்தப் பாமரனும், தொட்டதெல்லாம் பொன்னாக வேண்டும் என்று ஆசை ஒன்றையே அடிப்படையாகக் கொண்டு, வரம் பெற்று, அதன் விளைவாக தொட்டதெல்லாம் பொன்னாக—உண்ணும் உணவு—மனைவி உட்பட எல்லாமே பொன்னாக மாற செய்வதறியாது திகைத்து நின்ற —தன்னைத் தானே அழித்துக் கொண்ட மன்னனும் நம் முன்னோர்கள் கதைகளின் வழி நமக்குத் தந்த முன்னெச்சரிக்கைகள்.

ஆசை எனும் போர்க்களத்தில் தோற்றவர்களே மிகுதி என்றாலும், வென்றவர்களும் உண்டு.

'விறகு வெட்டியும் கோடரியும்' என்ற கதையும் நாம் படித்து, விட்ட கதைதான். மீண்டும் அதை எண்ணிப் பார்ப்பது பாரதியைப் புரிந்துகொள்ள துணை நிற்கும்.

ஒரு கிராமத்தில் விறகு வெட்டி ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் நாளும் காட்டிற்குச் சென்று விறகு வெட்டி வந்து, அதைக் கொண்டு பிழைப்பு நடத்தி வந்தான். வழக்கம்போல், ஒரு நாள் விறகு வெட்டிக் கொண்டிருந்தான். அப்போது அவன் கையில் இருந்த கோடரி, கை தவறி அருகில் இருந்த குளத்தில் விழுந்து விட்டது. என்ன செய்வது? பிழைப்புக்குரிய மூலதனமான கோடரி போய்விட்டதே! இனி எப்படிப் பிழைப்பது? என்றெல் லாம் பலவாறு கலங்கினன் விறகு வெட்டி.

அப்போது அங்கு ஒரு தேவதை தோன்றி, அவன் வருந்தி யதற்குக் காரணம் கேட்க, அவன் நடந்ததைக் கூறினன். உடனே அந்தத் தேவதை குளத்திலிருந்து, ஒரு தங்கக் கோடரியை எடுத்துக் காட்டி, இதுதானே உன்னுடைய கோடரி என்றது. அவனே, இது இல்லை என்ருன்: தேவதை, ஒரு வெள்ளிக் கோடரியை எடுத்துக் காட்டி இதுவா? என்றது; அதற்கும் அவன் இல்லை என்றே பதிலுரைத்தான். இறுதியாக, தேவதை ஒரு இரும்புக் கோடரியை எடுத்துக் காட்ட, இதுவே என்னுடையது என்று மனமகிழ்ந்து கூறி, அதைப் பெற்றுக் கொண்டான் விறகு வெட்டி.

அவனுடைய ஆசையற்ற மன உணர்வை — தனக்கு உரிமை உடையது தவிர, வேருென்றின் மேல் ஆசை வைக்காத உளப் பாங்கைப் பாராட்டிய தேவதை, தங்க—வெள்ளிக் கோடரிகளேயும் அவனுக்கே அளித்து, வாழ்த்தி மறைகிறது.

தேவதை தங்கக் கோடரியையும் வெள்ளிக் கோடரியையும் காட்டியபோது, அதனல் மனம் சலனப்படாமல், தன்னுடைய எளிய இரும்புக் கோடரியையே விரும்பிப் பெற்று மகிழ்ந்த அந்த விறகு வெட்டி, நாம் வழிகாட்டியாகக் கொள்ளத் தக்கவன் அன்ருே?

ஆசையின் வலேப்பட்டு அழிந்தவர்கள் நமக்கு எச்சரிக்கைகள் ஆகின்றனர்; ஆசையை வென்று அடக்கியவர்கள் நமக்கு வழி காட்டிகளாகின்றனர்.

இருவரையும் நாம் நினேவில் வைத்துக்கொள்ள வேண்டும். வழிகாட்டிகள் நாம் செல்ல வேண்டிய பாதையையும், தடுமாறிய வர்கள் செல்லக் கூடாத பாதையையும் தெளிவுபடுத்துகின்ருர்கள்.

இவையெல்லாம் வெறும் கதைகள்தாமே வாழ்க்கையில் இவை போன்று எங்காவது நடக்குமா? என்று நீதிக் கதைகள் உணர்த்தும்

படிப்பினைகளை ஒதுக்குவோரும் உண்டு. அப்படிப்பட்டவர்களுக்கும் பயன்பட வேண்டும் என்பதற்காகத்தான் பாரதி, தாம் நேரில் கண்டவற்றையும் அனுபவித்தவற்றையுமே எடுத்துக் காட்டி தாம் உணர்த்த விரும்பியதை உணர்த்தியுள்ளார்.

பல்வேறு துறைகளில் வல்லமையும் ஆற்றலும் பெற்று விளங்கியவர் பாரதியின் தந்தையார். எட்டையபுரம் ஜமீனில் உயர்பதவியில் இருந்தவர். வசதிகள் நிறைந்தவர். மேலும். பொருள் ஈட்டும் ஆர்வம் அவருக்கு எழுந்தது. நண்பர் சிலரின் அறிவுரையின்படி எட்டையபுரத்தில் பஞ்சாலை ஒன்றை நிறுவினர். அவர் எண்ணப்படி தொழில் வெற்றிபெறவில்லை. இலாபம் கருதி, தொடங்கப்பட்ட தொழில் இழப்பையே தந்தது. எளிய இழப்பு இல்லை அது; மாபெரும் இழப்பு. வளமை நீங்கி வறுமை வாழ்வு பெற்றது. நண்பர்கள் நீங்கினர்; சுற்றமும் உறவும் ஒதுங்கின; தனித்துவிடப்பட்டார், பாரதியின் தந்தை.

மேலும் மேலும் பொருள் சேர்க்க வேண்டும் என்ற பாழும் ஆசை அவரைப் படுகுழியில் வீழ்த்தியது. விழுந்தவர் விழுந்தவர்தான்; எழவேயில்லை.

''தேசத் தார்புகழ் நுண்ணறி வோடுதான்
திண்மை விஞ்சிய நெஞ்சின ரையினும்
நாசக் காசினில் ஆசையை நாட்டினன்
நல்லன் எந்தை துயர்க்கடல் வீழ்ந்தனன்''

என்பர் பாரதியார்.

ஆசை காட்டும் பாதையில் பயணம் செய்ய வேண்டாம் என்பதே இதன் மூலம் பாரதி கூற விரும்புவது. இதைப் புறக்கணித்தால், அவர் தந்தைக்கு நேர்ந்ததே நமக்கும் நேரும் என்பது அவர் தரும் எச்சரிக்கை. பற்றற்று வாழப் பழகிக் கொள்ள வேண்டும் என்பதே இதற்குரிய விளக்கம்.

பற்றற்று வாழ்வதென்றால், துறவியாக வேண்டும் என்பதல்ல பொருள்.

சலனங்களுக்கும் சபலங்களுக்கும் ஆட்படாமலிருப்பதே பற்றற்ற வாழ்க்கையாகும்.

ஆசை மேல் ஆசை வைக்காமலிருக்கப் பழகிக் கொள்வோம். ஆசைகள் அற்ற இடத்தில் குற்றங்கள் அற்றுப் போகின்றன.

'நெருப்பு சுடும்' என்று அனுபவித்தவர் சொல்லுகின்றார். நாம் என்ன செய்யப் போகின்றோம்? தொடாமலே விழித்துக்

கொள்ளப் போகிரேமோ? அல்லது தொட்டு, 'சூள்' கொட்டப் போகின்ரேமா?

உணர்வதையும் உணர்த்துவதையுமே இயல்பாகக் கொண்ட வர்கள் கவிஞர்கள். வாழ்க்கை அனுபவங்களாகத் தாம் உணர்ந்த வற்றைப் போகிறபோக்கில், தம் பாடல்களில் ஆங்காங்கே அள்ளித் தெளித்துச் செல்வது அவர் வழக்கம். அவர்தம் இலக்கியங்களில் ஈடுபடுவோர், இலக்கியம் எது, வாழ்க்கை அனுபவம் எது என்று பகுத்துக்கொண்டு, இலக்கிய அலகுகளை ரசிக்கவும் அவர்களுடைய அனுபவ மொழிகளைத் தமக்குரிய வாழ்வின் முன்னேட்டங்களாக ஆக்கிக்கொள்ளவும் பழகவேண்டும். அந்தப் பழக்கம் அவர்களை, வளர்க்கும்; உயர்த்தும்; ஆளாக்கும்.

தம்முடைய சுயசரிதையை எழுத முற்படும் பாரதி, மனித வாழ்க் கைக்குத் தேவையான அனுபவமொழிகளை வாழ்வியல் சிந்தனைகளை இடையிடையே பெய்து வைத்திருக்கின்ருர்.

நம் வாழ்க்கையை நெறிப்படுத்திக்கொள்ளப் பயன்படவல்ல அவற்றைத் தெரித்து கொள்வோமே.

மனிதரிடையே எப்போதுமே இரண்டு பிரிவுகள் உண்டு. இப்படித்தான் வாழவேண்டும் என்று தமக்கென்று ஒரு பாதை வகுத்துக்கொண்டு, திட்டமிட்டு வாழ்பவர்கள் ஒரு பிரிவினர்; எப்படியும் வாழலாம்; எப்படியாவது வாழ்ந்துவிடவேண்டும் என்று, நெறி முறைகளைப் பற்றிக் கவலைப்படாமல் மனம் போனவாறு புலன்களின் வயப்பட்டு, எப்படி எப்படியோ வாழ்கின்றவர்கள் இன்னெரு பிரிவினர். இவர்களுக்கு ஒன்றை அறிவுறுத்துவது என்பது செவிடன் காதில் சங்கு ஒலிப்பது போன்றது.

இலட்சிய வளையத்திற்குள் தங்களை நுழைத்துக்கொண்டு, தம் வாழ்க்கையை நெறிப்படுத்திக்கொள்ளத் துடிக்கும் மனத்தினர்க்கே பாரதி சொல்வதெல்லாம்.

உலகத்தின் கண்கள் யாரை அலட்சிய பாவத்துடன் நோக்கு கின்றன ?

உற்ருர் உறவினரும் நண்பர்களும் யாரைக்கண்டு விலகி ஓடுகின்றர்? யாரோ அந்நியனை அல்லது தீண்டத்தகாதவனைக் கண்டுவிட்டது போல முகத்தைச் சுளித்துக்கொண்டு ஒதுங்கு கின்றனரே யாரைக்கண்டு ?

மிக நெருங்கிய - இனிய உறவுகளாகக் கருதப்படும் தாய் தந்தையரும், மனைவி மக்களும் கூட அன்பில்லாதவர்களாக - கேள்விக்குறியோடும் சினக்குறியோடும் நோக்குவது யாரை ?

அவன் செய்த பாவம்தான் என்ன ?

இத்தனை பேருடைய ஒட்டுமொத்தமான பேரன்பிற்கும் பாத்திரமான அந்த மனிதனை உங்களுக்கு அடையாளம் தெரிகின்றதா?

அவன்தான் பொருளில்லாதவன்.

பொருளில்லார்க்கின மில்லை, துணையிலை,
பொழுதெலாமிடர் வெள்ளம்வந் தெற்றும்.

என்பது பாரதிவாக்கு.

மனிதன் வெறும் மனிதனாக – பொருளில்லாதவனாக – நாலு காசு சம்பாதிக்கத் தெரியாதவனாக இருக்கும் வரை அவன் சமுதாயத்தின் புறக்கணிப்புக்கு ஆளாவதைத் தடுக்கமுடியாது வறுமையின் வரவேற்பும் அமையும்.

வறுமையும் சமுதாயப் புறக்கணிப்பும் அவன் வாழ்க்கையை அழிக்கும் பணியைத் திறம்படச்செய்ய வல்லன என்பார் பாரதி.

பொருளில்லாதவர் படும்பாட்டிற்குத் தாமே நிலைத்த சான்றாக அமைந்தவர் பாரதியார்.

வறுமையும் அதன் விளைவாய் பாரதி அடைந்த இன்னல்களும் வரலாற்று நிகழ்ச்சிகள் ஆகும்.

" காலைகண் விழிக்கும் போதே பணம் என்ற ஞாபகம் ! " (1—7—1915)

" கடன்காரர் தொல்லை. வைத்தியனுக்குக் கொடுக்க பணமில்லை. குழப்பம், குழப்பம். தீராத குழப்பம் ! எத்தனை நாட்கள் ! எத்தனை மாதங்கள் ! எத்தனை வருஷங்கள் ! " (2—7—1915)

இவை அவருடைய நாட்குறிப்பின் சிலவரிகள். வறுமைபற்றி- இல்லாமைபற்றிக் கூறும்போதெல்லாம் பாரதியிடம் ஆழ்ந்த நெகிழ்ச்சியைக் காணமுடிகிறது.

அவர் வாழ்க்கையொடு இரண்டற கலந்து நின்ற வறுமையின் கொடிய கரங்கள் பிறரைத் தீண்டக்கூடாது என்பது பாரதியின் விருப்பம்.

ஆண்டாண்டு காலமாக வறுமையை அனுபவித்து உணர்ந்தவரான பாரதி நமக்குச் சொல்லும் அறிவுரை வறுமை கொடுமை. அதனால், செய்க பொருளை என்பதாகும்.

பொருளில்லாதவர்கள் காலம் தாழ்த்தாமல் பொருளீட்டும் முயற்சியில் ஈடுபடவேண்டும்.

பொருள்வரின், புதுப்புது அறிமுகங்கள், புதிய புதிய உறவுகள், பட்டம் பதவிகள், இன்னும் எத்தனை எத்தனையோ! பணத்தால் ஆகாதது எது ?

இப்படி, அனைத்திற்கும் மூல முதலாய் – கடவுள் நிலையில் வைத்துப் போற்றப்படும் பொருளை ஈட்டுவது எப்படி ?

எப்படி வேண்டுமானாலும் ....?

நமக்கு வேண்டியது பணம்தானே. அதை எப்படிப்பெற்றால் என்ன ? இது நம்முடைய கேள்வி.

அதற்கு, பாரதியின் பதில் வேறுவிதமாக இருக்கின்றதே !

பொருளைப் பெறுதல் அவசியம். அது நேரிய வழியில் — அறவழியில் பெறப்படவேண்டும். நமக்குப் பிடிக்காததையல்லவா பாரதி சொல்லுகிறார்! என்ன செய்வது? அல்லாத வழியில் வரும் பணம் வந்தவாறே போய்விடும் என்பதை அறிந்தவராயிற்றே அவர். அத்துடன் விடவில்லை. அதற்கு மேலும் சொல்லுகின்றார் பாரதி.

பொருளைப் பெறுக ; அறவழியில் பெறுக ; அதையும் அளவொடு பெறுக ; பெற்றதைப் போற்றுக. இதுவே, பாரதியின் மணிமொழி.

வாழ்க்கைக்குப் பொருளே அன்றி, பொருளுக்கு வாழ்க்கை இல்லை. இதை நெஞ்சில் நிறுத்துங்கள். காசுக்காக ஏங்கி, ஏங்கி அதை மிகுந்த அளவில் சேர்க்க விரும்பி, ஓயாமல் அலைவது அறியாமை. அந்த எண்ணத்திலிருந்து விடுபடுங்கள்.

பொருளாசை என்னும் மாயவலையில் சிக்கி அதன் இழப்புக்கெல்லாம் கட்டுண்டு இறுதியில் அழிவதில் யாருக்கு என்ன நன்மை? கெட்ட பின்பு அனைத்திற்கும் இந்தபணமே காரணம் என்று பணத்தைக் குறை கூறுவதிலோ, சாடுவதிலோ விளையும் பயன் என்ன ? ஏதுமில்லை அழிவு மட்டும் உறுதி.

அதனால் 'இன்னும், இன்னும்' என்று எண்ணாமல், 'போதும், போதும்' என்று எண்ணுங்கள்; வாழ்வு சிறக்கும் என்கிறார் பாரதி.

பெற்றதைப் போற்றுக! எப்படிப்போற்றுவது? பெட்டியில் வைத்துப் பூட்டவேண்டுமா? இல்லை.

அளவறிந்து வாழவேண்டும் என்று பொருள் கொள்ளுங்கள்.

அளவு அறிவது எப்படி? கொடுத்தும் சிவக்க வேண்டாம்! எடுத்தும் சிவக்கவேண்டாம்!

வரலாற்று ஏடுகளைத் திருப்பினால் வ. உ. சிதம்பரனார் என்ற வள்ளலைச் சந்திக்க முடியும்.

அவர் குவித்த பொருள் எல்லையற்றது. அவ்வளவும் அவர் உழைத்துச் சேர்த்தது.

அவர் வழங்கிய பொருளின் அளவும் எல்லையற்றது. வந்ததும் அதிகம், போனதும் அதிகம். தனக்கு என்று வைத்துக்கொள்ளத் தெரியாமல் வாரி வழங்கினார். கால ஓட்டத்தில் குன்று கரைந்தது. அறுசுவை உண்டு பழகியவர், ஒரு சுவைக்கே திண்டாடினார்; கொடுத்துச் சிவந்தார், எடுத்துச்சிவக்க பாரெல்லாம் ஓடினார்.

படித்தவர், பண்பட்டவர், பொதுவாழ்வில் அனுபவம் நிறைந்தவர். அவர் வாழ்வில் ஏன் இந்த நிலைதடுமாற்றம்?

அளவு தெரியாத தவறுதான்.

உழைத்து ஈட்டிய பொருள் என்றாலும், அறவழியில், உழைப்பின் வழிவந்த பொருள் என்றாலும், அளவொடு பெற்ற செல்வம் தான் என்றாலும், அளவறிந்து வாழத்தெரியாததால் தாய்த்திரு நாட்டுக்குத் தன்னலமற்ற தொண்டு செய்தவராக இருந்தும் அந்தத் தியாகி தம் இறுதிக்காலத்தில் பிச்சைக்குப் பாரெல்லாம் ஓடவேண்டியிருந்தது. நல்லவர், ஆனால் வல்லவராக வாழத் தெரியாததால், இன்று நமக்கெல்லாம் ஒரு பாடமாக – எச்சரிக்கையாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார் வள்ளல் சிதம்பரனார்.

பொருள் பெருமை உடையது. அதை நினைவில் கொண்டு அறவழியில் அதை ஈட்டுவோம். அளவோடு ஈட்டுவோம். நமக்காகவும் – பிறருக்காவும் வாழ்வோம் – அளவறிந்து வாழ்வோம்.

இப்படி ஒரு வாழ்க்கைக்கு நம்மைத் தயார் செய்து கொள்வதைப் பாரதிக்கு நாம் செய்யும் நன்றியாகக் கருதிக்கொள்வோமே! முடியுமா நம்மால்? நாம்தான் விட்டில்பூச்சிகளாயிற்றே!

---

* 2—5—1982 அன்று திருச்சி வானொலியில் ஒலிபரப்பப்பட்டது. இரண்டு நாள் சொற்பொழிவுகளையும் வெளியிட அனுமதி வழங்கிய திருச்சி வானொலி நிலையத்தாருக்கு நன்றி.

வள்ளுவர் காட்டும்

—: மன நலமும் வினை நலமும் :—

முனைவர் இ. சுந்தரமூர்த்தி

பாடு பொருள்:

வையத்து வாழ்வாங்கு வாழ்வதற்குரிய வாழும் நெறியைத் தமிழகத்துக்கு மட்டுமின்றி உலகுக்கே வழங்கியது வள்ளுவம். வள்ளுவர் கண்ட மாந்தர் குறள் முழுவதும் விரவி நிற்கின்றனர். இல்லற வாழ்விலும், துறவற வாழ்விலும், பொருளீட்டுவதிலும், போர் நடத்துவதிலும், அரசாளுவதிலும், அன்பைப் பொழிவதிலும் மாந்தருக்குத் தேவையான நெறிமுறைகள் யாவும் வள்ளுவத்தில் உள. குறளில் ஒரு சில இடங்களில் மட்டுமே மாந்தரைப் பற்றிக் கூறுவதாகக் கொள்ளுவதற்கில்லை. ஒவ்வொரு குறளின் எண்ணவோட்டத்திலும் மாந்தனே வள்ளுவர்க்குப் பாடுபொருள். கடவுள் வாழ்த்து முதல் ஊடல் உவகை முடிய மாந்த வாழ்விற்கு வழங்கும் கருத்துக் கருவூலமே குறள்.

மாந்தப் பண்பு:

பண்பும் அறிவும் வாய்க்கப் பெற்ற மாந்தரையே படைக்க விரும்பினார் வள்ளுவப் பெருந்தகை. தமிழ் இலக்கணம் உயிர்களை உயர்திணை—அஃறிணை எனப் பிரித்துப் பாகுபாடு செய்கின்றது. மாந்தரை உயர்திணையுள் அடக்குகின்றது. 'உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே, அஃறிணை என்மனார் அவரல பிறவே' எனத் தொன்னூலான தொல்காப்பியம் கூறுகின்றது. ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை என்ற ஐந்தறிவுகளைப் பெற்று விளங்கும் விலங்கினத்தைக் காட்டிலும் மாந்தன் உயர்ந்தவன். ஆறாவது அறிவாகிய 'மன அறிவு' உடையவன் மாந்தன் ஆதலால் அவன் உயர்ந்தவனாம் என்றார். இது மொழியிலக்கணம் கண்ட தொல்காப்பியரின் கருத்து; ஆனால் வாழ்விலக்கணம் கண்ட வள்ளுவரோ, அரம்போலும் கூர்மையரான அறிவினைப் பெற்றவர்களாயினும் அவர்களை அஃறிணையில் சேர்க்கின்றார். ஆம்! அறிவை விட மாந்தப் பண்பையே அதிகம் விழைகின்றார், வள்ளுவப் பெருந்தகை. பண்புக்கு முதன்மைச் சிறப்பும் அறிவுக்கு அடுத்த நிலையும் தரும் வாழ்வியற் சான்றோர் வள்ளுவர்.

அரம்போலும் கூர்மையரேனும் மரம்போல்வர்
மக்கட் பண்புஇல்லா தவர் —(997)

கூர்மையும் சீர்மையும்:

அரம் போலும் கூர்மை — மனிதன் பெற்ற 'விசேட அறிவு' இயல்பான மனிதனுக்கு இருப்பதைக் காட்டிலும் அரம் போலும் கூர்மையான அறிவு அவன் அறிவுச் சிறப்பின் பெருமையைக் காட்டுவது. எனவே இச்(விசேட அறிவு)சிறப்பு அறிவிற்குப் பயனாக விளைய வேண்டியது மக்கட் பண்பு. சிறப்பான அறிவு சிறப்பான பண்பையல்லவோ தர வேண்டும். ஆனால் அதற்கு மாறான பண்பு அமைந்தால் மாந்தன் அவ்விசேட அறிவையும் இழக்கின்றான், பண்பையும் இழக்கின்றான். 'விசேட அறிவிற்குப் பயனாய மக்கட் பண்பு இன்மையின், அதுதானும் இல்லையென்பதாயிற்று' என்பது பரிமேலழகர் கண்ட உரை நுட்பம.

உண்மையறிவு:

அறிவுடைமையும் பண்புடைமையும் வள்ளுவ நெஞ்சத்தின் வாழ்வியற் கூறுகளாக விளங்குகின்றன. அறிவு உடைமை என்பதற்குப் பொருள் விளக்கம் தரும்போது 'கல்வி கேள்விகளின் ஆய அறிவொடு உண்மையறிவு உடையனவாதல் என அவர்தம் நெஞ்சம் ஓர்ந்து உரையாசிரியர் உரைப்பதும் உளங்கொளத்தக்கது. உண்மையறிவு எனப்படுவது மாந்தனின் பண்பட்ட அறிவினைச் சுட்டும் எனலாம். பண்பட்ட அறிவாவது அன்புடைமையினால் அகமும் புறமும் பண்பட வாழ்தலாம்.

உலகம் தழீஇயது ஒட்பம் மலர்தலும்
கூம்பலும் இல்லது அறிவு —(425)
எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு
அவ்வது உறைவது அறிவு —(426)

என அறிவுடைமை அதிகாரத்தில் வலியுறுத்தப்படும் இவ்விரு குறட்பாக்களும் உலகத்தை நட்பாக்கும் உயர் பண்பையே சுட்டுகின்றன. உலகத்தை நட்பாக்குவதே மாந்த ஒட்பம். மலர்தலும் கூம்பலுமில்லாத ஒருநிலை நட்பு உயரிய நட்பாகும். கயப்பூப் போல வேறுபடாது கோட்டுப் பூப்போல ஒருநிலை நட்பே அறிவின்பம் தரும். 'உலகத்தையே நியமித்தவன் யான், என்னை நியமிப்பார் யாருமில்லை' எனக் கருதி நினைத்தவாறு ஒழுகும் மாந்தர்க்கு விளைவது புகழ் அன்று, பாவமும், பழியுமே' என உலகியலை உணர்ந்து அவர்க்கு உரைப்பது 'உலகத்தோடு உறைவது அறிவு' எனும் அறிவுரை. உலகத்தோடு உறையும் பண்பே இங்கு மாந்த அறிவாக மக்கட் பண்பாக வலியுறுத்தப்படுகின்றமை தெளிவு.

தெய்வ நிலை:

வாழ்வாங்கு வாழும் மாந்தனைத் தெய்வ நிலைக்கே உயர்த்துவார் வள்ளுவர். இந்நிலைக்கு உயர மாந்தர்க்கு 'மன நலம்' இன்றியமையாப் பண்பாக அமைதல் வேண்டும். மனநலம் குறித்த வள்ளுவரின் சிந்தனைகள் உலகளாவிய மாந்த ஒருமையுணர்வுக்கும், மக்கட் பண்புக்கும் அடிகோலுவன. மனநலத்தை வள்ளுவர் பெரிதும் போற்றி உரைக்கின்றார்.

மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம் —(457)
மன நலத்தின் ஆகும் மறுமை —(459)
மனத்தானாம் மாந்தர்க்கு உணர்ச்சி —(435)
மனம் தூயார்க்கு எச்சம் நன்று ஆகும் —(456)
மனம் தூய்மை செய்வினை தூய்மை —(455)

எனப் பல்வேறிடங்களில் மனநலத்தின் மாண்பைப் போற்றுவது பெரிதும் எண்ணத்தக்கது.

மனநலத்தின் மாண்பு:

உரையும் செயலும் தூய்மையாயிருக்க மனநலம் அடிப்படையாக அமைகின்றது.

மனம்வாக்குக் காயத்தால் வல்வினை மூளும்
மனம்வாக்கு நேர்நிற்கில் வல்வினை மன்னா,
மனம்வாக்குக் கெட்டவர் வாதனை தன்னால்
தன்னைமாற்றி யாற்றத் தகுஞானி தானே

எனத் திருமந்திரம் மனநலத்தின் சிறப்பை விளக்கும். பிற உயிர்களைவிட மாந்தன் அறிவால் உயர்ந்து நிற்கின்றான். அம்மாந்தனும் மன நலத்தால் சிறந்தனவாயிருப்பின் மன்பதை புகழ வாழ்கின்றான். மனநலங் கெட்டால் மதி கெட்டுழந்து மாந்த நிலையினின்றும் தாழ்ந்த மாக்களினமாய் மதிக்கப்படுகின்றான். எனவே மாந்தன் மனத்தின் அளவினனே. 'மனத்தானாம் மாந்தர்க்கு உணர்ச்சி' என்பது வள்ளுவ வரையறை.

மக்கள் மானிடர் என்று மனத்தினால்
மிக்க மேன்மை விளங்கினர், இல்லெனின்
பொக்க மேவும் பொறிகளோர் ஐந்தினால்
ஒக்க மாவினை ஒத்துயிர் வுற்றிடார்

எனப் பிரபுலிங்க லீலையும் மன நலத்தின் மேன்மையை வலியுறுத்தும்.

நல்ல செய்து நரரை உயர்த்தவும்
அல்ல செய்தங் களற்றிடை ஆழ்ப்பவும்

வல்ல திந்த மனமலது ஐயனே
இல்லை என்ன இயம்பும் மறையெலாம்

என மனத்தின் ஆற்றலை எடுத்துரைக்கும் பாடலும் எண்ணத் தக்கது. எனவே மாந்தரை உயர்த்தவும் தாழ்த்தவும் வல்ல ஆற்றல் மனத்திற்கு உண்டு. மன அமைதியுடன் மாந்தர் மகிழ்வோடு வாழ வள்ளுவர் காட்டும் தெள்ளிய நெறி பின்வரும் குறளில் அமைந்துள்ளதைக் காணலாம்.

மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற —(34)

மனமாசின்மையே அறமாகும். மனத்தின் இயல்பு' ஆற்றல், பயன் முதலானவற்றை நன்குணர்ந்தே வள்ளுவர் அறத்தின் ஆற்றலுக்கு அடிப்படையானது மனமாசின்மையே என்னும் முடிவுக்கு வருகின்றார்.

மாந்த நடத்தை:

மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என இதனைத் தத்துவ நூலாரும் பாகுபடுத்துவர். சிந்திக்கும் கூறு, அறிவுநலக் கூறு. செயல்படத் தூண்டும் நிலை, மூன்றினுள்ளும் விளங்குகின்ற அகங்காரம் இவை நான்கும் ஒன்றுபட மனம் இயங்கும். ஒன்றுக் கொன்று முரணாக இயங்கும்போதுதான் மாந்தரின் நடத்தை இகழ்ச்சிக்குரியதாகிவிடுகின்றது.

மாந்த நிலையினின்றும், மாந்த இலக்கண வரையறையி னின்றும், மாந்தப் பண்பு நலனின்றும் சிறிது தாழ்ந்த மக்களையும் 'இழிந்த மயிரனையர்' என ஒப்புமை காட்டும் அவர்தம் எண்ணப் போக்கு மாந்தர்க்கு வேண்டிய மன நலத்தின் இன்றிமையாச் சிறப்பை எடுத்துரைக்கும். முறையாக மனத்தை ஆளுகின்ற திறன் பெற்றால் மாந்த நலம் பெருமையுடையதாக விளங்கு கின்றது. உயிரினை இயக்கும் ஆற்றல் பெற்ற மனநலத்தாலே தான் மாந்தன் மாண்புறும் மாந்தனாகின்றான்.

மாண்புறு மாந்தன்:

மாண்புறு மாந்தனையே வள்ளுவர் சான்றோர் என்று கூறு வர். 'குணநலம் சான்றோர் நலம்' (382) என விதந்து சொல் வது காண்க. அங்ஙனமே மனநலம் கெட்ட மாந்தர்களைச் சாடு வதிலும் வள்ளுவர் தயங்கவில்லை,

மக்களே போல்வர் கயவர் —(1071)
தேவர் அனையர் கயவர் —(1073)
அறைபறை அன்னர் கயவர் —(1076)

ஈர்ங்கை விதிரார் கயவர் —(1077)
விற்றற் குரியவர் கயவர் —(1086)

என மனநலம் இல்லாத மாந்தரின் இயல்பினைச் சுட்டுவர்; மக்கட் பதடி (196) எனவும் குறிக்கத் தயங்கார்.

மன நலத்தினை அடிப்படையாகக் கொண்டே மாந்தரைப் பாகுபடுத்துவதனால் உளவியலையும் ஓர்ந்த வள்ளுவ நெஞ்சம் நமக்கு நன்கு புலனாகும். மனநலமும் வினைநலமுமே மக்கட் பண்பாக மலரத் துணை நிற்போம்.

தமிழ்

தமிழ்மொழி தென்னிந்தியா வெங்கணும் பரவியுள்ளது. அதனை 'அரவம்' என்றும் அழைப்பர். மேற்கே மைசூர், மேற்குத் தொடர்ச்சி மலைகள்வரை அம்மொழி பயின்று வருகின்றது. வடக்கே சென்னைப்பட்டினம் முடியவும் அதற்குச் சற்று அப்பாலும் அது பயின்று வருகின்றது. ஈழமென்னும் இலங்கையின் வட பகுதியிலும் தமிழ் மொழியே நாட்டு மொழியாக இருந்து வருகின்றது. 1901-ஆம் ஆண்டு எடுத்த குடிமதிப்புக் கணக்குப்படி அப்பகுதியிலிருந்த தமிழரின் தொகை 955,535. தமிழ் நாட்டிலிருந்து சென்றுள்ள தொழிலாளர்கள் கூலி வேலைக்காரர்கள் மூலம் ஈழத்தைக் கடந்தும் பல பகுதிகளில் தமிழ்மொழி பயின்று வருகின்றது. இன்னுங் கூறப்புகின், வீட்டு வேலை செய்யும் வேலைக்காரர்கள் மூலம் தமிழ்மொழி இந்தியா வெங்கணுமே பேசப்பட்டு வருவதைக் காணலாம். 'திராவிட மொழிகளுள் தமிழ் மொழியே மிகமிகத் தொன்மை வாய்ந்ததும், பெருவளம் பொருந்தியதும், மிகவுஞ் சீர் திருந்தியதுமான உயர்தனிச் செம்மொழியாகும்; சொல்வள மிகுந்தது; அளவிட வொண்ணாப் பண்டைக் காலமுதற் பயின்று வருவது.' வகையும், தொகையும், தனியுமாகக் கணக்கற்ற இலக்கியங்கள் இம்மொழியில் இலங்குகின்றன. ஆனால் பெரும்பாலும் அவையெல்லாம் மிகவுந் திருந்திய 'செந்தமிழ்' நடையானியன்றவை; வழக்காற்றிற் பேசப்பட்டு வரும் கொடுந்தமிழ் நடையானியன்றவை யல்ல.

தமிழில் காணப்படும் வடமொழித் திரிபுகள் பிற மொழிகளில் உள்ள வடமொழித் திரிபுகளைவிட எவ்வளவோ சிதைந்திருக்கின்றமையால் அவற்றின் வழக்கு மிகப் பழமையானது என்று ஏற்படுகிறது; தமிழின் பழமைக்கு இதுவும் ஒரு சான்றாகும்.

—கால்டுவெல்.

பாரதிகுழந்தை—கண்ணம்மா.

K. சோமசுந்தரம், பி. ஏ., பி. எல்.,

அன்பினது உயர்வின் சிறப்பு தோன்றுவதற்கு முக்கிய காரணமாயுள்ளது குழந்தை தரும் இன்பமாகும். இத்தகைய இன்பத்தில் அருட்புலமை சான்ற தெய்வப்பெற்றியினர் 'குழந்தை கட்டோன்றிய காமப்பகுதி' எனும் துறையினை வகுத்துக்கொண்டு இறைவனை குழந்தை வடிவத்தில் வைத்து அன்பு பூண்டு தெள்ளத் தெளிந்த மொழியில் பலபட பாராட்டிப் பாடி மகிழ்தல் மரபு, மற்றும் இதன் சிறப்புத் தோன்றும் வகையில், வாகைத் திணையில் 'பொருளொடு புணர்ந்த பக்கம்' எனும், துறையில் குழந்தைப் பேற்றையும் இணைத்துக் கூறுதல் இளம்பூரணரது கருத்தென்பது அவரது உரைக்குறிப்பாலுணர்க. எனவே பெருஞ் செல்வப் பொருள்களைப் பெற்ருர், பிள்ளைப்பேற்றினைப் பெருவிடின், அப் பொருள்களால் பெறும் பயன் யாது மில்லை யென்பது 'படைப்புப் பல படைத்து' எனும் பொருண்மொழிக் காஞ்சி புறப்பாட்டால் (188) துணிபுற நன்குணரப்படும். ஆகவே, அன்புசெலுத்தி வளர்த்த குழந்தையாகிய சிறந்த இன்ப உருவாம் பொருளுக்கு முன், ஏனைய செல்வப் பொருள்களின் தோற்றம் தாழ்வுறும். இதனை யறிந்து அறிவூட்டும் வகையில் தெளிவுதர மொழியும் ஆற்றலால், சொற்சுவை நயமுடைய விற்பனத் தமிழ்ப்புலவோர். ஆனந்தத்தை நெஞ்சில் நிலைக்குமாறு அளிக்கும் குழந்தைக் கவிதைகள், உயிரோட்டமுடன் வாழும் அழகுண்மைச் சுடராக அமைந்து நிலவுவது கண்கூடு.

பாரதியாரது கவிதை 'கண்ணம்மா என் குழந்தை', 'பிள்ளைக் காதல்' எனும் பாடாண்டிணை வகையைச் சார்ந்தது, கண்ணம் மாவைத் தன்குழந்தையாக்கி, பாரதியார் ஒரு சௌந்தரிய ஞானி யாக அதன்பால் தம் நெஞ்சைப் பறிகொடுத்து, அழகுச் சொற் களால் இன்ப இசையளித்து அன்புச்சுவை நனிசொட்டச் சமைக்கும் விந்தையில், அருட்சுவை வீசுமாறு ஓர் அற்புதக் கவிதையினைப் பொழிகின்ருர். இதன்கண், குழந்தைக் கண்ணம்மா வின் மீது அன்பு முற்றமுற்ற பாரதியார் தன்னைத் தாயாகவும், பராசக்திமயமாயுள்ள கண்ணம்மாவைத் தனது குழந்தையாகவும் கருதி, நியாய அன்பு ஏற்படும் வகைமுறையில் தானே இறை வியைப் பொங்கும் பரிவால் போற்றிக் காத்தல் வேண்டுமென்று நினைவு கொள்ளுகிருர். இந் நிலையில், பராசக்தி தன்னைக் காப்பாற்றும் நினைவு நழுவிவிடவே, உண்மைச் சுடர்ஒளியால்

உள்ளம் பூரித்து அன்பின் உணர்வொடு குழந்தையின் எழிலுருவை, உயிரும் உணர்வும் ஊட்டிப் பொலியும்படி, ஓர் அதிசய இசை யோவியமாகக் காட்சியளிக்குமாறு செய்து, பாரதியார் கவியோகி யாகத் திகழ்கின்றார். பாரதியாரது வாக்கில் ஒளிவளர்க்கும் தமிழ் வாணி அருள் நடம் புரியவே, இக்கவிதை அவரைத் தெய்வக் கவியாக, நம் சிந்தையில் காட்சியளிக்குமாறு வற்புறுத்துகிறது.

கண்ணம்மாவின் பெயரின் உச்சரிப்பினிலே ஓர் ஓசையின்பம் நம்முயிரைத் தழுவி ஓடுவது போன்று, ஓருணர்வு மனத்தில் ஊறித் ததும்பி மலர்த்துவது அறியப்படும். இத்தகைய உணர்வோடு, சேசுக்பியரின் காவியச் சுவையும், கீட்சின் அணி நடையும், செல்லியின், ஓசை நடையும், வேர்ட்சுவொர்தின் சுடர் நடையும் தாந்தேயின் அருளின்ப நடையுடன் கலந்து குழைந்து, குழந்தைக் கவிதைப் பண்ணில், அப்பண்ணிற் கிசைந்த பைரவி இராகமொடு குழந்தை தவழ்வது போன்றும், ரூபகத்தாள அறுதிகொண்டுள்ள இசைபோலத் துள்ளிக் குதிப்பது போன்றும் இலங்குவதைக் காண இயலும்.

பாரதியார், கண்ணம்மாவை, சின்னஞ்சிறுகிளியே ! செல்வக் களஞ்சியமே ! பிள்ளைக்கனியமுதே ! பேசும் பொற்சித்திரமே! என் கண்ணின் பாவையே ! எனக் கொஞ்சி அச்சொற்றொடர்களிலே தானே ஒன்றித் தோய்ந்து விடுகிறார். தன் கண் முன்னே, கண்ணம்மா ஆடிவரும் தேனாய் ஓடிவருகையிலே, தன் உள்ளம் குளிர்வதை உணர்ந்து பாரதியார், அதனை ஆர்வமொடு அள்ளித் தழுவி, தூக்கி அணைந்து உவகையும் சுவர்க்க இன்பமும் கொள்ள விழைகிறார். அதன் உச்சிதனை முகந்து உண்மையின்பம் பொங்க, தன் அன்புணர்வால் ஒரு செருக்கு தன்னுள்ளே வளர்வதைக் காண் கிறார். அக்குழந்தையை மெச்சி ஊரார் புகழுங்காலை தம்மேனி சிலிர்க்க, அன்புமீதூர குழந்தையை முத்தமிட்டாலோ, ஆசையும் இன்பும் கூடிய கள்வெறியும் பாசவெறியும் இவர்பால் ஒருங்கு சேர்த்து கிளரச்செய்து விடுகிறது. மற்றும் அதனைத்தழுவினாலோ. தான், மெய்ப்பாட்டுத் திறன் தோன்ற உன்மத்த மாகுதலையும் தானே நினைப்பூட்டிக்கொண்டு பிதற்றுகிறார். இவ்வாறு பாரதியார் அன்புணர்வும், உவகை எழுச்சியும், சொல்லாட்சியால், கவிதையில் இழைந்தோடுமாறு, கண்ணம்மா மீதுள்ள தனது முறுகிய வாத்சல்ய பக்தியினைப் புலனாக்கி விடுகிறார்.

மற்றும் குழந்தைக்கு சற்று முகஞ் சிவந்தாலோ, பாரதியாரது மனம் சஞ்சலமுறுகிறது; அதன் நெற்றி சுருங்கினாலோ, இவரது நெஞ்சம் பதைபதைத்துப் படர்கிறது. குழந்தை அழுங்குதலைக்

கண்டாலோ, தன் நெஞ்சில் உதிரமே உதிர்வது போல் நொவ்வி தாக நொந்து விடுகிறார். 'ஏனம்மா வீணில் ஏங்கி அழுகிறாய்? என்னுயிர் நின்னதல்லவோ !' என அன்பின் பிணைப்பால் கதறி கலக்கம் கொள்ளுகிறார். இக்கதறலின் வழி, சிந்தனைக் கவிஞர். குழந்தை கண்ணம்மாவின் மீதுள்ள பேரன்பு மிகுதியையும், சமுதாயத்திற்குப் பாலூட்டும் பெண்மைத் தன்மையின் சிறப்பியல் பினையும் மென்மையாக விளக்கிக் குறித்துள்ளதைக் காண்க.

இதற்கப்பால், பாரதியாரது கவிதையே கருணையன்பில் ஊற் றெடுத்துப் பொங்கி வருந்தோடுவதைக் காண இயலும். இது காறும் குழந்தையும் தெய்வத்தையும் ஒன்றாக பாவித்த பாரதியார் தெய்வத்திற்கு முன், குழந்தைக் கண்ணம்மாவின் ஏற்றத்தை பனோபாவமாகக் காண்கிறார்.

இன்பக் கதைகளெல்லாம்—உன்னைப் போல
ஏடுகள் சொல்வதுண்டோ ?
அன்பு தருவதிலே—உன்னை நேர்
ஆகுமோர் தெய்வமுண்டோ ?

என வினவுகிறார். ஈண்டு குழந்தைக் கண்ணம்மாவை ஏட்டினும் மிகுந்த இன்பக்கதையாகவும், அன்பு பொழிவதில் சிறந்த தெய்வ மாகவும் பாரதியார் கருதியது சிந்தனைக்குரியது. குழலினும் யாழினும் இனிய குழந்தையின் மழலைச் சொல்லால், தன் துன்பத் துயரங்கள் தீர்ந்து போவதையும், மற்றும் அதன் முல்லைச்சிரிப் பாலே, தனது மூர்க்கமும் மூடத்தன்மையும் தவிர்ந்து போதலையும், சீருடன் வாழ குழந்தையைத் தூக்கி அணைப்பதற்கு ஈடான பிறி தொரு செல்வமுமில்லை என பாரதியார் பகர்வர். பாரதியார் உண்மைக் கவிதையை நன்கு உணர்ந்தவராதலால், கவிதையினை உயிராகவும், செல்வமுமாகவும் கருதி, அதனையன்றி தான் ஒரு கணப்பொழுதும் வாழ இயலாதென்ற உண்மையினையும் உணர்த்து வராயினர். தனது நற்கவிதையில், இயற்றிய மணி எண்ணங்கள் நிறைந்த சொற்களின், ரீங்காரத்தில் ஒலி மூலம் இசையணியுடன் பாடிப் பொழிவதின் வழி சிறந்துள்ளனவாதல் பற்றி, அக்கவிதை போன்ற நீ (கண்ணம்மா !) பூணுதற்குரிய வைரமணிகளை விட, உயர்ந்து சிறந்துள்ளாய் என்பர் பாரதியார்,

குழந்தை கண்ணம்மாவைப் பற்றிய பாரதியாரின் காட்சிப் புலமையினின்றும் காவியச்சித்திரம் உருவாக, காவிய குண நலங் களுடனும். சுவைகளுடன் இசைவாகவே எண்வகை மெய்ப்பாடு களின் அமைதியுடன், இன்பதுன்ப நெகிழ்ச்சியையும், எழுச்சி

யையும், மலர்ச்சியினையும், மிளிரும் வகையில், பாரதியார் விய்ங்கச் செய்தது, இக்கவிதைப் பயனை நுகர்வார்க்கு கழிபேருவகை பயந்து அன்னரது வாழ்வினையும் மாண்புறச் செய்யும். பாரதியார் தன்னைக் 'கலிதீர்த்து ஏற்றம் புரியவந்தாய்', என கண்ணம்மாவை முதற்கண் கூறி, பின், 'என் முன்னே ஆடிவரும் தேனே,' எனப் பாடி, அப்பால் கண்ணம்மா ஓடி வருதலையும் ஆடி அலைதலையும் அறிமுகப்படுத்தி, தன் கவிதைக்கனவுகள் அவைகள் மீது மிதந்து வருதலையும் காட்டுகிறார். அதன் பின்பு கண்ணம்மாவை 'அள்ளி அணைப்பதில்' அன்பினையும், முத்தமிடல்' 'மெச்சி ஊரார் புகழுதல்' ஆகியவற்றால் 'மேனி சிலிர்த்தல் மூலம் இன்பப் புன்னகை புரியும் பெருமிதத்தையும், கன்னத்தில் அமுதூற முத்தமிட்டுத் தழுவவே கள்வெறியொடு உன்மத்தமாகுதலில் நிறை மகிழ்ச்சியையும், 'முகஞ் சிவத்தல்வழி கோபத்தையும், 'சஞ்சலமாகுதலால்' எழும் அச்சத் தையும், 'உதிரங்கொட்டுதல்' என்றதால் அழுகையினையும், முல்லைச் சிரிப்பால்' நகையுண்டாதலையும், 'உன்னைப்போல் ஏடுகள் சொல்வதுண்டோ! உன் நேர் ஆகுமோர் தெய்வமுண்டோ! என்பதில் வியப்பு உணர்ச்சியினையும், பாரதியார் உணர்த்தி, மெய்ப்பாடுகளின் பாகுபாடுகளில் காணும் தனியழகை நன்கனம் புதுமைப்படுத்தி வைத்து, இக்கவிதையைப்போல் 'செல்வம் பிறி துண்டோ!' எனக் குறிப்பால் காட்டியிருப்பது வியந்து உவந்து போற்றற்குரியதாகும்.

மற்றும், பாரதியார் தன் உள்ளுணர்வு நிலையையில் காணும் கண்ணம்மாவின் காட்சி நலத்தை, தனது ஆக்கப் பேருள்ளத்து சக்தியால், கவிதை மாட்சி யுணர்வோடு புலப்படுத்தியிருப்பது இறும்பூதற்பாலது. குழந்தை இன்பத் தமிழுக்கு இலக்கியமாய், பாரதியார் தன் பாட்டின் திறத்தாலே, கற்பவர் மனதில், கவிதை தரும் இன்பம் இறைவனது அருள் நிலையினை உணரும்போது தான் பெறப்படும் என்பதையும், குழந்தைகளால் தான் உலகில் அன்பு நிலைத்து நிற்பதாகிய தன் கவியுள்ளத்தையும் தனிச்சிறப்புடன் காட்டிவிடுகிறார். குழந்தை கண்ணம்மாவைப் பற்றிய கவிதையே காப்பியமாகவும், சுவையே அதன் உயிராகவும், மணியனைய சொல்லும் பொருளும், அணியும், மெய்ப்பாடும் அதன் உடலாக வும், பாரதியார் இயற்கை நயனொடு யாப்புறுத்திய செவ்வியக் கற்பாலதாகிய அருமையுடைத்து.

மாசிலாத இக் கவிதை, குழந்தைகளின் தெய்வீக உள்ளத்தை அன்புணர்வின் திறனோடு அனுபவித்து படம்பிடித்துக்காட்டியவழி, பாரதியார் தன் உள்ளக்குறிப்பினை மெய்ப்படுத்தியதால், இது குழந்தைகளுக்கு அவர் அளித்த அன்புக் காணிக்கையாகும்.

அன்புணர்வின் ஆராமை. கலைத்திறம், கற்பனை யாற்றல், இசைப் பயன், தென்றல் தழுவிய நடையழகு, கவியெழுச்சி, பண்ணெழில், சொல்லாட்சி முதலானவை உலப்பிலாப்புகழுடன், இக்கவிதையில் மனத்தை மலர்விக்கும் பெற்றிமை வாய்ந்து திகழ்ந்து அழகு செய்தல் கண்டு தெளிக. மற்றும், இக்கவிதையின் கண் வந்துள்ள சொற்சுவையிலும், பொருட்சுவை போக்கிலும் ஆழ்ந்து படிந்தோர்க்கு, அன்பு மீதூர்ந்து முதிருங்காலை, அன்னார் இறையருளை உணர்தல் இயற்கை. இவ்வாறு இறையருளை உணரும்போது உண்டாகும் பரமசுக நிலையே, கவியின்ப அமுதாதல் இயல்பு. அன்பிற்கு இலக்கணமாக அமைந்த இக்கவிதை, அகத்தழகின் உருவிளக்கமாயுள்ள அருட்கலையின் மாண்பினை, குழந்தை மூலம் பாரித்துரைப்பதால், இது சிறப்பாக தமிழ் வாணியின் சின்னமாய் நின்று நிலவுவது ஆழ்ந்து நோக்கத்தக்கது.

குழந்தை கண்ணம்மாவின் அழகுப் பொலிவுடன் விளங்கும் இக்கவிதையின்கண் குழந்தை உள்ளத்தோடு இலங்கும் அன்பும், இயக்கமும், அமைதியும் இருக்குமிடம். இறையின் இருப்பிடம் என பாரதியார் சுட்டிக்காட்டி, அதனை அறியப் பெற்றால் மக்கள் தன்னுணர்வுடன் ஆன்ம நேயஉரிமையோடு வேறுபாடின்றி வாழ வாய்ப்புண்டு என்ற குறிப்பால் அறிவுறுத்தி, மக்கட் பேறுடையார் மண்ணில் நல்லவண்ணம் வாழ வகை செய்யும் விண்ணக ஆனந்தம் என்பது குழந்தையோடு சிறப்புற உறவாடும் ஆன்மீகச் செயல்களின் பெருக்கினை நாடுவதைத் தவிர பிறிதில்லையென, கவியூகப் பொலிவால் பாரதியார் உணர்ந்து, வாழ்வின் விழுமிய இன்பங் காணும் அவரது மந்திர போதனை எத்துணை இன் சுவைத்தாகயுள்ள தென்பது வெளிப்படை.

எண்ணுப் பெயர்கள்

எண்ணுப் பெயர்கள் (numerals) மூவிடப் பெயர்கள் போன்றவைகளே, மூவிடப் பெயர்கள் பொருள்களின் பெயர்கள் ஆகாமல் அவற்றிற்கு ஈடாதல் போலவே, எண்ணுப் பெயர்களும் அவ்வப் பொருள்களின் பெயர்கள் ஆகாமல் அவற்றிற்கு ஈடாக வழங்குகின்றன. மூவிடப் பெயர்கள் அடிக்கடி மாறுமல் நிலைபெற்று வழங்கிவருதல் போலவே, எண்ணுப் பெயர்களும் மாறுதலின்றி வழங்கி வருகின்றன. மூவிடப் பெயர்கள் பெரும்பாலும் ஓரசைச் சொற்களாகக் குறுகிய வடிவம் பெற்றிருத்தல் போலவே, ஏறக் குறைய உலக மொழிகள் எல்லாவற்றிலும் எண்ணுப் பெயர்களும் பெரும்பாலும் ஓரசைச் சொற்களாகவே உள்ளது,

—முனைவர் மு. வ.

சில நினைவுப் பாடல்கள்

திரு. அடிகளாசிரியர்

(1) தவத்திரு 'மறைமலையடிகளார்' மயிலம் தமிழ்க் கல்லூரிக்கு ஒருமுறை வந்திருந்தார்கள். அவர்கட்கு வரவேற்புப் பாட்டாக ஐந்து பாட்டை எழுதிப் படித்துக் கொடுத்தேன். அவற்று ளொன்று

''எத்தனையோ புலவர்கள்முன் பிருந்தார்க
ளென்றாலு மிவர்க ளெல்லாம்
அத்தனையுந் தமிழ்த்தாயை ஆரியத்தின்
அடிச்சியென ஆக்கி வைத்தார்;
உத்தியினின் மிகச்சிறந்த உரவோனே!
நீயுதிக்க, ஒருதா னாகி,
முத்தனைய தமிழ்சிறக்கும் முறைகண்டாய்
நீவாழி மூன்பி னோடே''

என்பதாகும். இதனை யான் படித்தவுடன் அடிகளார் குறுக்கிட்டு ''இப்பாட்டு எமக்கு முகமனன்று; முற்றிலும் பொருந்தும்'' என்று கூறினார்கள்.

(2) கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்குத் தனிப் பேச்சாளராக உயர்திரு இரா. சேதுப்பிள்ளை, பி. ஏ., பி. எல்., அவர்கள் அழைக்கப்பட்டிருந்தார்கள். அவர்கள் பேசிச் சென்றபின் கீழ்வரும் பாடல்களை எழுதினேன்.

''இப்படித்தான் பேசுமுறை இருக்க வேண்டும்
என்பதற்கோ ரிலக்கண மா யிலங்கும் வண்ணம்
எப்படியி லிருப்பவர்க்கும் இனிமை தோன்ற,
எளிதாகத், தெளிவாக, எதுகை யோடே,
செப்பிடும்பல் பொருளெல்லாம் சிறந்தே நிற்கச்,
செந்தமிழ்சொல் சேதுப்பேர்ச் சீர்த்தி யோனே!
அப்படியிப் படியசையா நுன்சொல் கேட்கும்
அவைநிலையை அகக்கண்ணால் அறிகின் றேனே''

''காதுக் கினியராய்க் கருத்தொன்றிக் கேட்டிடவே
சேது செழுந்தமிழைச் செப்புங்கால்—தீதின்றி
உள்ளம் உருக, உணர்ச்சிப் பெருக்கதுதான்
வெள்ளம்போ லோடும் விரைந்து''

உரிச் சொல்லும்

—: பல பொருள் ஒரு சொல்லும் :—

முனைவர் ஆதித்தன்

உரிச்சொற்களைப் பற்றி உரையாசிரியர்கள், பல்வேறு ஆராய்ச்சி அறிஞர்கள் வெளியிட்டுள்ள கொள்கைகள் உரிச்சொல்லின் இயல்பினைத் தெரிந்து கொள்வதற்குப் பெரிதும் உதவி செய்கின்றன. எனினும் இவை முழுமையான தீர்வுகளாக அமைதல் இல்லை. இக்கட்டுரை உரிச்சொற்களின் பண்பினைப் பிறிதொரு கோணத்தினின்றும் ஆராய்கின்றது.[1]

உரிச்சொல் பற்றித் தனிச் சொல்வகைக் கொள்கை, தனிச் சொல்வகையின்மைக் கொள்கை, செய்யுள் வழக்குக் கொள்கை, தாதுக்கொள்கை, வேர்ச்சொற் கொள்கை, பெயரடை — வினையடைக் கொள்கை, அருகிய சொல்வழக்குக் கொள்கை, சொற்களஞ்சிய சார்புக் கொள்கை, நுண்பெயர்க் கொள்கை என்று பல்வேறு கொள்கைகள் வெளிவந்துள்ளன.

உரிச்சொற்களாகத் தொல்காப்பியர் உரியியலில் கூறும் நூற்று இருபது உரிச்சொற்களில் பல பெயர்களாகவும் சில வினைகளாகவும் ஒருசில பெயரடைகளாகவும் வினையடைகளாகவும் செயல்படுவதால் உரிச்சொற்கள் தனிச்சொல்வகைத் தன்மை உடையன அல்ல என்று கூறுவர் அறிஞர் (மோ. இசரயேல், 1970, பக். 69). உரிச்சொற்கள் பயன் நிலையில் பெயர்களாகவும், வினைகளாகவும், செயல்படுவதால் தொல்காப்பியர் கடினமான சொற்களுக்குப் பொருள் கூறுவதன்பொருட்டே உரியியல் அமைத்துள்ளார் என்னும் கருத்து இவண் நினைவு கூரத்தக்கது.

தொல்காப்பியர் கூறும் உரிச்சொற்கள் வேறுவேறு வகையினைச் சார்ந்திருப்பினும் இவற்றிற்கெனத் தனி ஒரு இயல் அமைத்து இவற்றிற்குப் பொருள் கூறும் நிலையினைப் பார்க்கும் பொழுது தொல்காப்பியர் தெளிவான கருத்துடனேயே உரியியல் அமைத்துள்ளார் என்று கருதவியலும்.

தொல்காப்பியர் சுட்டும் நூற்று இருபது உரிச்சொற்களும் மூன்று நிலையில் அமைகின்றன.

1) ஒரு சொல் ஒரு பொருள் — 49 உரிச்சொற்கள்
2) ஒரு சொல் பல பொருள் — 20 உரிச்சொற்கள்
3) பல பொருள் ஒரு சொல் — 51 உரிச்சொற்கள்

தொல்காப்பியர் கூறும் இவ்வுரிச் சொற்களை இலக்கிய வழக்காறுகளின் வாயிலாக ஆய்ந்து காணலாம். உரிச்சொற்களுக்குச் சான்றுகள் தொல்காப்பியத்திற்குச் சமகால இலக்கியங்களாகக் கருதப்பெறும் சங்க கால இலக்கியங்களிலிருந்து இவண் எடுத்தாளப் பட்டுள்ளன.[2]

நூற்று இருபது உரிச்சொற்களில் முப்பது உரிச்சொற்கள் சங்க கால இலக்கியங்களில் இடம்பெறவில்லை.

1) ஒரு பொருள் ஒரு சொல் — 9,
2) பல பொருள் ஒரு சொல் — 5,
3) ஒரு பொருள் பல சொல் — 16.

இவை நீங்கலாகக் கிடைக்கப் பெறும் தொண்ணூறு உரிச்சொற்களும் சங்க கால இலக்கியங்களில் ஒன்றிற்கு மேற்பட்ட பொருளில் கையாளப்பட்டுள்ளமை தெரிய வருகின்றது.[3] (ஏ. ஆதித்தன், 1979, பக் 17). நான்கு உரிச்சொற்கள் தொல்காப்பியர் சுட்டிய பொருட்களினின்றும் வேறுபட்டு வேறு பொருட்களைத் தருகின்றன.

எல்லா உரிச்சொற்களும் இலக்கிய வழக்காற்றில் ஒன்றிற்கு மேற்பட்ட பொருளில் வழங்கப் பெறுவதால் உரிச்சொற்களை பல பொருள் தரும் வடிவங்கள் (Homophonous Forms) என்று கருதலாம்.[4] அவ்வாறாயின் தொல்காப்பியர் சில உரிச்சொற்களுக்கு ஒரு பொருளும் சில உரிச்சொற்களுக்குப் பல பொருளும் இன்னமும் ஒரு பொருளிளைச் சுட்டும் பல உரிச்சொற்களையும் வேறுபடுத்தி அமைக்க வேண்டியதில்லை என்ற ஐயம் எழலாம்.

தொல்காப்பியர் வெளிப்படவாரா உரிச்சொற்களையே உரியியலின்கண் குறிப்பிடுகின்றார்.

வெளிப்படு சொல்லே கிளத்தல் வேண்டா
வெளிப்பட வாரா உரிச்சொல் மேன

—(தொல், சொல். 300)

தொல்காப்பியர் சுட்டும் உரிச்சொற்களும் அவற்றின் பொருளும் வெவ்வேறு கிளைமொழிகளைச் சார்ந்தவைகளாக அமையமுடியும்.[5] ஒரு வடிவத்திற்கு இரண்டு பொருட்கள் ஒரு கிளைமொழியில் அமைவதில்லை. வேறுவேறு கிளைமொழிகளோடு தொடர்பு கொள்ளும் நிலையில் ஒரு வடிவத்திற்கு இரண்டு அல்லது மூன்று பொருட்கள் அமைய வாய்ப்பு உண்டு.

இந்நிலையில்தான் தொல்காப்பியர் பல பொருள் தரும் வடிவங்கள் நூற்று இருபதுக்குப் பொருள் தருகின்றார். ஒரு வடிவத்

திற்கு ஒரு பொதுப்பொருள் இருக்கும் நிலையில் ஏதேனும் ஒரு கிளைமொழியில் வேறு பொருள் இருக்குமாயின் அப்புதிய பொருளை மட்டும் சுட்டினால் போதுமானது. இந்நிலையில்தான் சில உரிச்சொற்களுக்குத் தொல்காப்பியர் ஒரு பொருள் மட்டுமே சுட்டுகின்றார் எனலாம்.

இன்னமும் சில உரிச்சொற்களுக்குப் பொதுப்பொருள் நீங்கலாக ஒன்றற்கு மேற்பட்ட பொருட்கள் வெவ்வேறு கிளைமொழியில் அமையும் நிலையில்தான் தொல்காப்பியர் பல பொருள் தரும் உரிச்சொற்கள் சிலவற்றினைச் சுட்டுகின்றார். மொழியில் உண்மையான ஒரு பொருள் பல சொல் (Synonyms) கிடையாதென்பதும் கிளை மொழி வழக்கினால்தான் (Dialectal Voriation) இவை ஆக்கம் பெறுகின்றன என்பதும் மொழியியல் அறிஞர்கள் கருத்தாகும்.

முதல் நிலையில் கிளைமொழிகளில் ஒரு சொல்லுக்குப் பல பொருட்கள் பயன்பாட்டு நிலையில் உருவாக்கம் பெறவியலும்; இரண்டாம் நிலையில் பொருள் நிலையில் ஏற்படும் மாற்றத்தால் பல சொற்கள் ஒரு பொருளைக் குறிக்கும் நிலையும் ஏற்படுதல் உண்டு. இதனால்தான் தொல்காப்பியர் ஒரு பொருள் பல சொல் என்ற பாகுபாட்டினையும் தருகின்றார். இதற்குச் சான்று பகரும் நிலையில்தான் தொல்காப்பியர் சுட்டும் ஒரு பொருள் பல சொற்களும் சங்க கால இலக்கியங்களில் ஒன்றற்கு மேற்பட்ட பொருளினை உணர்த்தி நிற்கின்றன.

எனவே உரிச்சொற்களை திசைமொழி வழக்கினால் ஏற்பட்ட பல பொருளினைத் தரும் ஓருருவ வடிவங்கள் என்று கொள்வதே சிறப்புடையதாகும்.

―★―

இக்கட்டுரை எழுதுவதற்குப் பேருதவிபுரிந்த பேராசிரியர் முனைவர் மோ. இசரயேல், முனைவர் செக. நீதிவாணன் ஆகியோர்க்கு நன்றி.

குறிப்புகள்:

1) 1979-ஆம் ஆண்டு சனவரி மாதம் மதுரை-காமராசர் பல்கலைக்கழகத்தில் நடந்த ஆய்வாளர்கள் கருத்தரங்கில் படித்த கட்டுரையின் சுருக்கமே இக்கட்டுரை.

2) திருக்குறள், சிலம்பு, மணிமேகலை ஆகியனவும் எடுத் தாளப்பட்டுள்ளமையால் பத்துப் பாட்டு, எட்டுத்தொகை ஆகிய அனைத்தும் சேர்ந்த ஒரு நிலையில் சங்க கால இலக்கியங்கள் என்று சுட்டப்பட்டுள்ளன.

3) சங்க கால இலக்கியங்களில் கிடைக்கப் பெறும் தொண்ணூறு உரிச்சொற்களில் பதினைந்து தொல்காப்பியரால் 'பல பொருள் ஒரு சொல்' எனும் வகையின என்று குறிக்கப் பெற்றவை.

4) உரிச் சொற்களின் வருகை நிலைக்கும் அவை உணர்த்தும் வெவ்வேறு பொருட்களுக்கும் இலக்கியச் சான்றுகள் இக் கட்டுரையில் விரிவஞ்சிக் குறிப்பிடப்படவில்லை.

5) தொல்காப்பியர் வழக்கு,—செய்யுள் என்னும் இருவகை நிலையில்தான் இலக்கணம் அமைக்கின்றார் என்பது இவண் குறிப்பிடத்தக்கது.

உடனுதவிய கட்டுரைகள் மற். நூல்கள்:

1) சதாசிவம், எம். (1961) — 'உரிச்சொல்லும் வேர்ச் சொல் லும் ஒன்றா?', செந்தமிழ்ச் செல்வி, துணர் 36, எண் 2, பக். 103-110.

2) சங்குப்புலவர், தி. (1962) — 'உரிச் சொல்லாராய்ச்சி', செந் தமிழ்ச் செல்வி, துணர் 36, எண். 3, பக். 325-332.

3) இசரயேல், மோ. (1970) — 'உரிச்சொல் ஓர் ஆய்வு', தமிழ்ப் பொழில், துணர் 44, பக். 65-72.

4) இசரயேல், மோ. (1977) — 'இடையும் உரியும்', சிந்தா மணி வெளியீடு. மதுரை.

5) சேஷாத்திரி, ந. (1972) — 'குறுந்தொகையில் உரிச்சொற் கள்', ஆய்வுக் கோவை தொகுதி 6, பக். 411-415.

6) மணிகண்டராமன், சு. (1973) — 'உரிச்சொல்' ஆய்வுக்கோவை, தொகுதி 5, பக். 731-736.

7) ஆனந்த நடராசன், ஏ. (1973) 'உரிச் சொற்கள்', இலக்கணச் சிந்தனைகள்', பக். 80-85.

8) மீனாட்சிசுந்தரன், தெ. பொ. (1974) 'உரிச்சொல்' இலக்கண ஆய்வுக் கட்டுரைகள்-1. பக். 131-135.

9) சாம்பசிவன், ச. (1974) 'உரிச்சொல்' இலக்கண ஆய்வுக் கட்டுரைகள்-1, பக். 109-113.

10) மகாலட்சுமி, சு. (1978) 'இலக்கண வரலாற்றில் உரிச் சொற்கள்', மதுரைப் பல்கலைக் கழக எம். ஃபில், ஆய்வேடு.

11) ஆதித்தன், ஏ. (1979) 'இலக்கண ஆய்வில் உரிச் சொற்கள்', பரல்கள், மதுரை காமராசர் பல்கலைக் கழகம், (அச்சில்) மதுரை.

12) காமேசுவரி, மீ. (1979) 'தொல்காப்பியரும் அகராதியும்', மொழியியல், தொகுதி 2, எண் 4, பக். 93-107.

திருக்குறள்
பொருள் விளக்கம்

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

அகரத்தை முதலாக உடைய முதற் கணக்கின் –முதல்– எழுத்துக்கள் அனைத்துச் சொற்களுக்கும் முதலாய் உள்ளனபோன்று, அறக்கூறினை முதலாக உடைய இறைமுதல்வனின் அறநெறிமையே உலக மக்களின் வாழ்க்கைக்கு முதலாய் உள்ளது.

—கா. அ.

வினா விடை

வினா : (1) வண்ணப்பாடல் சந்தப்பாடல் ஆகியன ஒருபொருட் கிளவிகளா? இல்லையா? காரணங்களுடன் விடையளிக்க வேண்டு கிறேன்

(2) தந்தை இலேச்சுமடன் எனத் தொடங்கும் நேரிசை வெண்பா (யா. காரிகை 58 உரை) இதன் பொருளைத் தெளிவு படுத்தவும்

(3) 'நெடிலெதுகை' எனக்கூறிய யா. காரிகை ஆசிரியர் குறிலெதுகை எனக் கூருததேன் ?

மா. சற்குணம் எம். ஏ.,
துணைப்பேராசிரியர்
சி. பா. சு. தமிழ்க்கல்லூரி மயிலம்.

விடை 1 : ஒருபொருட் கிளவிகள் அல்ல. வண்ணம் செந் தமிழ்ச் சொல், சந்தம் (ஆரிய) வடமொழிச் சொல் பிற்கால — இக்கால இலக்கிய ஆசிரியர் பலர் இவை இரண்டும் ஒன்றே எனக் கருதுமாறு எழுதியும் பேசியும் வந்துள்ளனர், வருகின்றனர். அதனுன் இவ்வினா வரவேற்கத் தக்கது. காரணங்களொடு விடை வரையின் மிகவிரியும் ஆதலின் இவைபற்றிச் சில குறிப்புக்களை மட்டும் தருகிறேன். இத்தலைப்பினைத் தக்கார் ஓரிருவர் ஆய்வு செய்தளிப்பின் சிறந்த தமிழ்த் தொண்டாகும்.

வண்ணம் :— தொல்காப்பியத்துட் கூறப்பெற்ற வண்ணம் இடைக்கால யாப்பிலக்கண நூல்களுட் செம்பாதி பிறழ்ந்துள்ளது. 14, 15 ஆம் நூற்ருண்டில் இலக்கியப் போக்கில் பிறிதொரு வரை யரையைப் பெற்றுள்ளது அதனிற் பிறழாமற் சிலரும் அதனைத் தெளியாமற் சிலரும் இலக்கியம் செய்துள்ளனர், செய்து வருகின் றனர்.

தொல்காப்பியம் இசை அடிப்படையில் செந்துறை வண்ணம் வெண்டுறை வண்ணம் என இரண்டையும் இயற்றமிழச் செய்யு ளுறுப்பாக '' வண்ணம் '' என ஒன்றையும் கூறுகின்றது. செய்யு ளுறுப்பாகிய வண்ணம் இருபது வகைப்படுமென்று விளக்கியுள்ளது இவற்றுள் பொருள் பற்றியனவும் ஓசைபற்றியனவும் எழுத்துப் பற்றியனவும் உள.

இடைக்கால யாப்பிலக்கணங்கள் எழுத்தடிப்படையில் நூறு வண்ணங்களைக் கூறுகின்றன. கலிப்பா உறுப்பாக ஒரு வண்ணமும் கூறுகின்றன.

பிற்கால வண்ணம் (வடமொழிச்) சந்தத்தின் அடிப்படையில் சில புறனடைகளொடு பதினுராக அமைந்துள்ளது. இக்காலத்துத்

தாள அமைதியும் முடுகொலியும் அமைந்த செய்யுட்களையும் ஒரு சார் இசைப்பாக்களையும் வண்ணப்பாடல் என்று வழங்குகின்றனர்.

சந்தம் :— சந்தம் என்பது சமற்கிருத யாப்பினுள் விருத்தங்கட்கும் தண்டகங்கட்கும் உறுப்பாகக் கொள்ளப்படும் எழுத்தலகுகளின் தொகை குறித்து வருவதாகும். அம்மொழியுள் லகு—குரு என்னும் அலகுகள், தம்முள் ஒத்தும் மாறியும் ஒன்றுமுதல் இருபத்தாறு வரை வருவனவற்றை உத்தம், அதியுத்தம் முதலாக உற்கிருதி ஈருகப் பெயர்கொடுத்து வழங்குவார். அவையே சந்தம் எனப்படும் அவற்றின் செயல்முறைப் பகுப்புகள் பல உள.

இசைத்தமிழுள் ஆரியக்கலப்பு நேர்ந்து பல குழப்பங்களை ஆக்கியிருப்பது போன்று வண்ணத்துள் சந்தம் புகுந்து குழப்பியுளது. அதனுன் தாழம்பட்ட ஓசையுடைய பாக்களையும் தாளம்பட்ட ஓசையுடைய பாடல்களையும் ஒருசார் கொச்சகக் கலிப்பாக்களையும், கலியுறுப்பாகிய தாழிசைகளையும், வண்ணகங்களையும் இடைக்காலத்தெழுந்து பெருத்து வழங்கி வரும் ஒருசார் விருத்தச்செய்யுட்களையும், விநோதக் கூத்திற்குரிய ஒருசார் பாடல்களையும் ஒருவகை வரிப்பாடல்களையும் குரவைப் பாடல்களையும் வேறுபாடின்றிச் சந்தப்பாடல்கள் என இக்காலத்தார் வழங்கிவருகின்றனர்.

விடை 2 :

தந்தை இலைச்சுமடன் தாய்தொழிலி தான்பார்ப்பான்
எந்தைக்கீ தெங்ஙனம் பட்டதுகொல்—முந்தை
அவியுணவி ஞர்தெரியின் யாவதாங் கொல்லோ
கவிகண்ண ஞர்தம் பிறப்பு (இப்பாடம் யா-வி-கண்டது)

இதுமெய்வசைக்கு எடுத்துக் காட்டியுள்ளமையின் எந்தை—கண்ணனர் என்பவை இகழ்ச்சிக் குறிப்பின கவிகண்ணன் = கவிழ்ந்த நோக்கினன் (அரைக்குருடன் என்பது குறிப்பு) இவன் தன்னைப் பார்ப்பான் எனச் சொல்லித் திரிகிருன்

இவன் தந்தையோ இலையைச் சுமர்ந்து திரிபவன் [இலை என்றது உணவு உண்டு கழித்த இலைகளை] சகரம் மிகாதிருப்பின் தந்தையில்லாதவன், (தந்தையைத் தெரியாதவன் என்பது குறிப்பு) அறிவிலி என்பது பொருளாகும். தாயோ தொழில் செய்து திரிபவள் (நாலாங்குலத்தவள் என்பது குறிப்பு) இவ் ஆசை இவனுக்கு எங்ஙனம் உண்டாயிற்று. அவியுணவினர் = வேட்டும் வேட்பித்தும் உண்ணும் பார்ப்பனர். அவர் முன்னர் இதுதெரிய நேர்ந்தால் உயர்பிறப்பினனுகப் பேசும் இவன் நிலை யாதாகுமோ? இழித்து ஒறுக்கப்படுவான் என்பது இசை எச்சம் கொல் இரண்டும் ஐயம்.

விடை 3 : எதுகைத் தொடைபற்றி ஆசிரியர் தொல்காப்பியர் அடிபற்றிவருவதொன்றும் சீர்பற்றி வருவன இரண்டும் ஆக மூன்று வகையே கூறியுள்ளார். இடைக்கால யாப்பியலார் பலபடியாக விரித்துக் கூறியுள்ளனர். அவர்கட்கு அடிப்படை வடமொழியிற் காணப்பெறும் அநுப்பிரசமென்னும் யாப்புறுப்பாகும். வடமொழி யுள் ருலு அம் அஹ தவிரக் குறில் மூன்றே யாதலின் குறிலெதுகை யாக வரும் பிராச நடையைத் தவிர்த்து நெடிலெதுகையாக வருவனவற்றையே சிறப்பாகக் கையாளுவர் வடமொழியாளர். அதனைப்போற்றி ஏற்றுக்கொண்ட இவர்கள் அம்முறையிலேயே செய்துள்ளமையின் குறிலெதுகையை கூருதுவிட்டனர் போலும். வடமொழித் தண்டகத்தில் பிராசமும் அனுப்பிராசமும் நெட் டெழுத்து அடுத்தடுத்து வருவதனல் ஏற்படுமாதலின் அம்முறை பற்றி நெடிலெதுகை கொண்டுள்ளனர் எனலாம்.

பேராசிரியர். ச. பாலசுந்தரம்.

நாயக்கர் கால ஓவியம்

விசயநகர மன்னர்களைப் பின்பற்றி அவர்கள் பிரதிநிதிகளாக வந்த நாயக்கர் பல இடங்களில் ஓவியங்களைத் தீட்டி வைத் துள்ளனர். மதுரை, தில்லை, திருவெள்ளறை, திருக்குற்ருலம், திருவலம்புரி, குடந்தை, திருவரங்கம், செங்கம், பட்டீசுவரம் முதலிய இடங்களில் நாயக்கர் கால ஓவியங்கள் உள்ளன. தஞ்சாவூரில் நாயக்கர் காலத்தில் கோயில் சுற்றுப் பிரகாரத்தில் ஓவியம் தீட்டினர். இவை சோழர்கால ஓவியங்கள் மீது வரையப் பட்டன. அந்த நாயக்கர்கால ஓவியங்களை நீக்கிப் பார்க்கும் பொழுது அதனடியில் எழில்வாய்ந்த சோழர் ஓவியங்கள் கிடைத் துள்ளன.

இக்கோயில் திருச்சுற்றில் விட்ணு தன் கரங்களில் ஆழியும் சங்கமும் ஏந்தி, வலப்பக்கத்தில் அலைமகளும் (ஸ்ரீ தேவி) இடப் பக்கத்தில் நிலமகளும் (பூதேவி) கொண்டு நிற்கும் கோலமும், ஐராவதத்தின் மேலமர்ந்த இந்திரனின் தோற்றமும், ஆட்டின் மேலமர்ந்த அக்கினியின் தோற்றமும், மகரத்தின் மேலமர்ந்த வாயுவின் தோற்றமும், விண்ணக மகளிரான அரம்மையும், ஊர் வசியும் மயில் கண்டன்ன மடநடை மகளிரும், பிறவும் தீட்டியுள்ள பாங்கு நாயக்கர்கால ஓவியனின் கலைத்திறமையைக் காட்டுபவை யாக உள்ளன. இங்கு விட்ணு தாமரை தடாகத்தில் மலர் கொய் யும் காட்சி அழகாக எழுதப்பட்டுள்ளது. —மா. சந்திரமூர்த்தி,

தமிழகக் கோயிற் கலைகள்.

தமிழ்ச் சொற்களில் தத்துவம்

ந. இரா. முருகவேள், எம். ஏ., எம். ஓ. எல்.,

முன்னுரை:

மொழியும் பண்பும், ஒரு நாட்டினது மக்களின் விழுமிய செல்வங்களாகும். நாட்டிற்கு விழுப்பம் விளைவிக்கும் அவ்விரண்டினையும், உயிரினும் மேம்பட்டனவாக மதித்துப் போற்றுதல் வேண்டும். ''நிலத்திற் பிறந்தமை கால் காட்டும், காட்டும் குலத்திற் பிறந்தார் வாய்ச்சொல்'' என்னும் பொய்யாமொழிக் கிணங்க, ஒரு தனி மனிதரின் பண்பினை, அவர்தம் வாய்மொழியில் வைத்து நாம் உணர்ந்து கொள்ளுதல் கூடும். அங்ஙனமே ஒரு நாட்டு மக்களின் பண்பாட்டினையும் மனப்பான்மையினையும், அவர்தம் மொழியின் இயல்பும் அமைப்பும் கொண்டு, நாம் ஆராய்ந்து கொள்ளலாம்.

சொல்லில் உயர்வு:

'சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே' என்று பாடினார் பாரதியார். உலகில் ஒவ்வொரு மொழிக்கும் ஒவ்வொரு இயல்பு உண்டு என அறிஞர்கள் கூறுவர். அம்முறையில், தமிழ் மொழிக்கும் தத்துவ உணர்வுக்கும் மிகநெருங்கிய தொடர்பு காணப்படுகின்றது. எழுத்துக்களுக்கு 'உயிர் எழுத்து—மெய் எழுத்து — உயிர்மெய் எழுத்து' எனப் பெயர்கள் அமைத்து வழங்கியதும், பிற மொழிகள் போலச் சொற்களைச் சொல் நோக்காது, பொருள் நோக்கி உயர்திணை-அஃறிணை, ஆண்பால் பெண்பால் எனப் பாகுபாடு வகுத்ததும், தமிழ் இலக்கணத்தில் தனிப்பெரும் சிறப்புகளாக விளங்குகின்றன.

தமிழிலுள்ள எல்லாச் சொற்களும் ஆழ்ந்த பொருட்குறிப்பு உடையனவாகவே அமைக்கப் பெற்றுள்ளன. 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' என்பது தொல்காப்பிய நூற்பா, ஆதலின் பிற மொழிகளைப்போலக் காரணமின்றியும், பொருள் குறியாமலும் இடுகுறியாக மாத்திரம் வரும் சொற்கள் எதுவும், தமிழில் இல்லை என்பது புலனாகின்றது. புலமையுடையவர்கள் ஆராய்ந்து காணும் பொழுது, தமிழ்ச் சொற்கள், பற்பல அரிய சிறந்த உண்மைகளை உணர்த்தவல்லனவாகத் திகழ்கின்றன.

உயர்பொருட் சொற்கள்:

கடவுள் இறைவன் இயவுள் உலகு வையம் நிலம் தரை உடல் உயிர் ஒழுக்கம் கற்பு முதலிய சொற்களில், செறிந்துள்ள திட்ப நுட்பம் சான்ற கருத்துக்கள், பழந்தமிழ் மக்களின் அறிவறிந்த

பண்பினையும், உயர்வற உயர்ந்த நாகரிகச் சிறப்பினையும், உள்ளவாறு உணர்தற்குப் போதிய சான்றுகளாக மிளிர்கின்றன.

1) எல்லாவற்றையும் கடந்து நிற்பவன்; எல்லாவற்றையும் உள்ளிருந்து கடாவி (செலுத்தி) நடத்துபவன் 'கடவுள்'.

2) எல்லாப் பொருளிலும் தான் தங்கி இருப்பவன்; எல்லாப் பொருள்களும் தன்பால் தங்க இருப்பவன் இறைவன்.

3) தான் இயங்காமல் தனிநின்று, எல்லாப் பொருள்களின் உள்ளும் இருந்து இயக்குபவன் 'இயவுள்'.

4) எல்லா உயிர்களும் உயிவுதற்கு இடமாக இருப்பது; என்றேனும் ஒரு காலத்தில் அழிந்துபடத் தக்கது 'உலகம்'.

5) எல்லாப் பொருள்களையும் வைக்குமிடமாக விளங்குவது வையம்.

6) அனைவரும் அனைத்தும் நிற்பதற்குரிய இடம் 'நிலம்'.

7) எல்லாவற்றையும் தரிப்பது (தாங்குவது) 'தரை'.

8) அவ்வப்போது மாறுபட்டு நிற்பது உடல் (உடலுதல் — 'உடல்'.

9) மூச்சு விடுதலாகிய உயிர்த்தலைச் செய்வது; இறைவனை அறிந்து வழிபட்டு உய்வதற்கு உரியது 'உயிர்'.

10) தீய பண்புகள் அழிந்து (தபுதல்—அழிதல்(, நற்பண்புகள் ஓங்கி மிகுவது (தவ—மிகல்) 'தவம்'.

11) முன்னொடுபின் முரணாமல், மனம் மொழி மெய் என்னும் மூன்றனாலும் ஒழுங்குபட்ட வாழ்க்கை 'ஒழுக்கம்'.

12) கல்லைப் போலும் அன்பில் திண்மை: தாய் தந்தைய்ரும் சான்றோரும் அறநூல்களும் கற்பிக்கும் நெறியில் ஒழுகும் நெறியில் 'கற்பு'.

இத்தகைய சொற்பொருள் நலங்கள் பலவற்றையும் 'கருதுங்கால், இச்சிறந்த சொற்களைப் படைத்து வழங்கிய நம் தமிழ் முன்னோர்களின் பண்பாடும் நாகரிகமும் நன்கினிது புலனாம்.

சிதம்பர சுவாமிகள்:

தமிழகச் சமய உலகில், திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகள்

அவர்களை அறிஞர் அனைவரும் நன்கினிது அறிவர், ஏறத்தாழ முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னே விளங்கியிருந்த தமிழ்ப்பெருஞ் சான்றோர் அவர்! அவர் இயற்றிய ''திருப்போரூர்ச் சந்நிதி முறை'' என்னும் நூல், சமய உலகில் பெரும் புகழ் வாய்ந்த அரும் பெறல் துதிநூல்! வடலூர் இராமலிங்க அடிகளாரால் பெரிதும் மதித்துப் போற்றப் பெற்றவர் சிதம்பர சுவாமிகள் எனின், அவர் தம் அருமை பெருமைகளை நாம் என்னென்று புகழ்ந்துரைப்பது?

அத்தகைய பெருஞ் சிறப்பினராகிய சிதம்பர சுவாமிகள், திருப்போரூர்க்கு அணித்தேயுள்ள திருக்கழுக்குன்றம் வேதகிரீசு வரப் பெருமான்மீது பாடிய பதிகம் ஒன்றில், ஒரு பாடலின் வாயிலாக, அமிழ்தினும் இனிய நமது தமிழ் மொழியின் தத்துவ அடிப்படை உணர்வு நலத்தினை, அழகுற விளக்கி யருள்கின்றார்.

'வீடு' என்னும் சொல் யாவரும் அறிந்தது; யாவரும் வழங்குவது. மிகவும் எளிய சிறிய இந்தச்சொல். தத்துவ நூற் கருத்துக்களையெல்லாம் தன்கண் சுருக்கமாகத் தொகுத்துப் பொதிந்து கொண்டு, திகழ்தலை ஓர்ந்து உணர்ந்து வியக்கின்றார் சிதம்பர சுவாமிகள்,

சொல்லில் தத்துவம் :

'வீடு' என்னும் சொற்குப் பொருள் விடுதலை (முத்தி). 'வீடு' என்ற சொற்பொருட் குறிப்பினாலேயே, கட்டுண்டிருந்த நிலை (பெத்தம்) புலனாகின்றது. அதனால் கட்டுண்டவனும், கட்டியிருப்பதும் ஆகிய பொருள்கள் உண்டு என்னும், தெளிவாகத் தெரிகின்றது. கட்டுண்டவன் பசு; கட்டிருப்பது பாசம். கட்டு ஆகிய கயிறு, அறிவில்லாத சடப்பொருள், கட்டப்பட்டவனோ, தனக்கென உரிமை இல்லாதவன் (அசுதந்தரன்). எனவே, கட்டியுள்ள கயிற்றை அவிழ்த்துக் கட்டப்பட்டிருப்பவனை விடுவிப் பவன் ஒருவன் உளனாதல் வேண்டும். அவனே எல்லா அறிவும் எல்லா ஆற்றலுமுடைய தலைவன் (பதி) ஆவான். கட்டுண்டவன் அத்தலைவனின் அருளைப் பெற்றதால், கட்டு அவிழ்ந்த விடுதலை பெறலாம். இதனையே எல்லாச் சமயங்களும் ஒவ்வொரு வகை யில் இயம்புகின்றன. இதனைச் சிறப்பாகச் சைவ சித்தாந்தம் என்னும் தமிழகத் தத்துவக் கொள்கை விளக்குகின்றது. பதி பசு பாசம் எனச் சைவசித்தாந்த நூல்கள் கூறும் முப்பொருள் உண்மை களை யெல்லாம், 'நுண்ணிய ஆலின் சிறு பழத்து ஒரு விதை' போல, வீடு என்னும் எளிய இனிய சிறிய தமிழ்ச்சொல்லே சுருக்கமாகத் தொகுத்து உணர்த்தி வருகின்றது. எனச் சிதம்பர சுவாமிகள் பின்வரும் பாடலில் குறிப்பிடுகின்றார்.

'வீடுஎன் றறைதரு சொற்குப் பொருளோ
விடுதலை ஆதலினால்,
வீக்குண்டோனும், கட்டும், முன்னர்
விளங்கும் இடமாகப்;
பீடுறு கட்டுத் தானாய் விட்டுப்
பெயராது: இதுசடமாம்;
பிணிபட் டோன்றுசு தந்திரன் ஆம்;இப்
பிணிபெயரச் செய்வோன்,
நீடு சுதந்தரம் உளவாம் ஒருவன்;
நேருக்குஇவ் வேதுவினால்
நிகழ்பதி பசுபாசம் என்னும்முப் பொருள்,
நித்தியம் என்றருளி,
வேள்தனை வெல்லும் குருவாய் எனைஆள்
மெய்ப்பொருள் நீ அன்றோ?
வேத கிரிப்பவ ரோக வயித்திய
வேணி முடிக்கனியே''

'வானம்' 'வானுலகம்' எனப் பொருள்படும் Heaven என்னும் ஆங்கிலச் சொல், 'மிகவும் முயன்று பாடுபட்டு உழைத்தே அடைவதற்கு உரியது' (That which is to be attained by much heaving) என்னும் நுண்பொருள் குறிப்புடையது என்று, ஆங்கில மொழி அறிஞர்கள் கூறுவதும், இங்கு நாம் இயைபுபற்றி உணர்ந்து இன்புறுவதற்குரியது.

முடிவுரை:

''ஒவ்வொரு மொழியிலும், தனிச் சிறப்பாகப் பொருள் வளம் நிறைந்த சொற்கள் சில உள்ளன. அவை, செம்பாதி மறந்துபோன பழம் பெரும் தொடர்புணர்ச்சிகளையும், தம்மிடம் மறைவுறப் பொதிந்து வைத்துக் கொண்டுள்ள புதையலாகத் திகழ்கின்றன. சொற்பொருள் கூறும் நிகண்டுகள் உணர்த்தாத, எத்தனையோ பல அரிய பொருட் குறிப்புக்களை, அவைகள் விளக்கிக் கொண்டு நிற்கின்றன. அவற்றின் வளம் மிகுந்த நுண் பொருட்டிறங்களை, அவ்வம் மொழியாளரே செவ்விதின் உணரவல்லவராவர். பொருள்வளம் நிறைந்த இனைய சொற்களினாலேயே கவிதைகள் அமைகின்றன; அவை மொழிபெயர்த்து உணர்த்த முடியாத, கவிதை அழகுக் குரிய திறவு கோலாகவும் திகழ்கின்றன. இத்தகைய

> பொருள்வளம் மிக்க சிறந்த சொற்கள், இந்திய மொழி களில் ஏராளமாக உள்ளன.*

என அறிஞர் ஒருவர் கூறுவது, ஈண்டு நாம் சிந்தித்து இன்புறுதற் குரியதாக உள்ளது

இங்ஙனம், செந்தமிழ் மொழியில் சிறந்த தத்துவ உணர்வு மாட்சியினை நலங்கொள விளக்கிய, சிதம்பர சுவாமிகள் போன்ற சான்றோர்களின் நூல்களை, நாம் பலகாலும் ஓதி மகிழ்ந்து உய் வோமாக!

—★—

---

*"In every language there are some words that are peculiarly rich in meaning; they ;have a wealth of secret loveliness, drawn from ancient and half forgo then associ-at'ons; they do not stand alone. but are part of a whole world of thought to which their dictionary definition often gives little clue. yet which is present, however dimly, to those who speak the language as their mother-tongue. A stranger may learn something of theirpower, but he can never savour them to the full They are the stuff of which peetry is made. and the key to its untranslatable beuy. They afound in the great languages of India:"

—Marjorie Sykes.

சிற்ப நூல்கள்

பல தெய்வங்களின் உருவங்களை, பல்வேறு நிலைகளின் சிற் பங்களாகச் செதுக்குவதற்கும், சுதையினால் செய்வதற்கும், வண்ண ஓவியங்களாக வரைவதற்கும் வழிகாட்டியாக அமைந்த நூல்களே சிற்ப நூல்களாகும். இவற்றில் பல்வேறு தெய்வங்களின் உருவ நிலைகள் த்யானச்லோகங்களாக அமைந்துள்ளன. இவற்றை அகத்தின்கண் நிறுத்தி, கல்கல் என்ற உளியின் ஓசை யூடே கல்லிலே அழியாத காவியத்தைப் படைத்தவர்கள் சிற்பிகள், சிற்பாசாரியர்கள். இவர்களுக்காக இயற்றப்பட்ட காச்பயம், சாரஸ்வதம், ப்ராம்மீயம் முதலிய சிற்ப நூல்கள் ஏராளம். சாளுக்ய மன்னன் விக்ரமாதித்யன் என்பவன் மானஸோல்லாஸம் என்ற ஒரு சிறந்த சிற்ப நூலை இயற்றியிருக்கிறான்.

—இரா. நாகசாமி.
தமிழகக் கோயிற் கலைகள்.

பதிப்பாசிரியர் குழு:

1. திரு. **எஸ். நடராசன்**, எம். எல். ஏ.,
தலைவர்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

2. திரு. புலவர் **க. வெள்ளைவாரணனார்**,
பேராசிரியர்,
தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

3. திரு. புலவர் **பி. விருத்தாசலம்**, எம். ஏ.
முதல்வர்,
கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர்.

4. திரு. புலவர் **ச. பாலசுந்தரம்**,
367, மேலவீதி,
தஞ்சாவூர்.

5. திரு. புலவர் **சி. கோவிந்தராசன்**,
கரந்தை,
தஞ்சாவூர்.

6. திரு. புலவர் **மீனா. இராமதாசன்**, எம். ஏ.,
முதனிலைத் தமிழாசிரியர்,
உமாமகேசுவரனார் மேனிலைப் பள்ளி,
கரந்தை, தஞ்சாவூர்.

7. திரு. **அரங்க வே. சுப்பிரமணியன்** பி. ஏ.,
அமைச்சர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்;
பொழிற்றொண்டர்.

Regd No. TN/TJ/17.

தமிழ்த்தாய் வாழ்க

கரந்தைத் தமிழ்ச் சங்கம்

தமிழ்ப் பொழிலின் கையொப்பம்

		உள் நாடு		வெளிநாடு
1. ஆண்டு வரி	...	20—00	...	030—00
2. தனி இதழ்	...	02—00		
3. ஆயுள் வரி	...	250—00	...	250—00

—: சங்க உறுப்பினர்கள் :—

திங்கள் வரி	...	000—25
ஆண்டு வரி	...	003—00
ஆயுள் வரி	...	100—00

விற்பனைக்குக் கிடைக்கும் நூல்கள்

நெல்லை வருக்கைக் கோவை	0—12
சித்தரந்தாதி	0—12
சுநதி வீணை	0—25
பரத சாத்திரம்	1—50
கவியரசு நினைவுமலர்	1—60
சிவமும் செந்தமிழும்	0—25
Garland of Tamil Poetry	2—00
கச்சிக் கலம்பகம் —(பூண்டி அரங்கநாத முதலியார்)	0—50
தொல்—பொதுப்பாயிர உரை	0—12
தமிழரசி குறவஞ்சி	0—62
யாழ் நூல் —சுவாமி விபுலானந்தர்	50—00
கட்டுரைப் பொழில் (மணிவிழா மலர்)	30—00
மெய்ஞ்ஞானத்தின் – கொழுவிருக்கையில் அஞ்ஞானத்தின் வழக்கீடு (இரண்டாம் பதிப்பு)	2—00
நக்கீரர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் (இரண்டாம் பதிப்பு)	3—00
கபிலர் ,, ,,	4—00

ஆசிரியரும் வெளியிடுபவரும்: திரு. அரங்க. வே. சுப்பிரமணியம், பி. ஏ., கரந்தைத் தமிழ்ச்சங்கம், கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர்-613 002.

அச்சிடுபவர்: திருமதி S. நிர்மலா, அன்னை அச்சகம், 1734, காந்தி சாலை, தஞ்சாவூர்-613 002.